# மலர்ந்த ஜீவியம்

ஸ்ரீ அரவிந்தர் ஸ்ரீ அன்னை யோக மலர்

**டிசம்பர் 2005 ஜீவியம் 11 மலர் 8**

இம்மாத மலரில்..........

பொருளடக்கம்

| | பக்கம் |
|---|---|
| *இம்மாதச் செய்தி* | 2 |
| *எங்கள் குடும்பம் II* | 3 |
| *லைப் டிவைன்* | 38 |
| *அஜெண்டா* | 44 |
| *யோக வாழ்க்கை விளக்கம் V* | 46 |
| *அன்பர் கடிதம்* | 49 |
| *லைப் டிவைன் - கருத்து* | 51 |
| *அன்னையின் ஸ்பர்சம்* | 53 |
| *சாவித்ரி* | 61 |
| *Spiritual Light* | 63 |

❀❀❀

கதை, கட்டுரைகளில் வரும் பெயர்கள்
யாரையும் குறிப்பிடுவன அல்ல.
வருடச் சந்தா ரூ.60/-

## ஜீவியத்தின் ஓசை

✡ **உதயமான ஞானம் உள்ளேபோவது பிரம்மம் விழிப்பதாகும். அதுவே பிரம்மஜனனம்.**

✡ **வலிமை வளரும் பருவத்தில் தவறு, குற்றம், பாவம் பரிசு பெறும். பாவத்திற்கும் பருவம் உண்டு.**

✡ **முடிவு மூலவனுக்கு. முடிவுக்கு நமக்குரிமை இல்லை.**

✡ **ஊருக்குரியது சட்டம். மேதைக்குரியது சிருஷ்டி.**

## இம்மாதச் செய்தி

# யோகம் வாழ்க்கையாவது பெண்ணின் இனிமை.



## எங்கள் குடும்பம் II

*(சென்ற இதழின் தொடர்ச்சி.....)*

**சிறியவன் - அப்பா, நடந்தது, நடக்கவேண்டியது, நாம் செய்ய வேண்டியது, எல்லாம் விளக்கமாகச் சொல்லுங்கள். நீங்கள் கண்டிக்காமல் நாங்கள் திருந்தமாட்டோம். கண்டித்து விடுங்கள்:**

- ✡ **ஒரு மாதம் அனைவரும் கட்டுப்பாடாக இருந்ததால், turnover செலாவணி நிகர இலாபமாகிவிட்டபின் சிறியவன் மேற்சொன்னபடிப் பேசுகிறான்.**
- ✡ **சௌகரியம் தரும் சந்தோஷம் இது. கணக்கில் சேராது, என்றாலும் நல்ல வார்த்தைஎன்ற அளவில் நல்லது.**
- ✡ **இது கணக்கில் சேராதுஎனில், எது கணக்கில் சேரும்?**
- ✡ **சௌகரியத்தைப் பார்த்தும் சந்தோஷப்படாமல், நம்பிக்கையில்லாமல் பேசுவதைவிட இது சரி.**
- ✡ **எங்களைக் கண்டித்துவிடுங்கள்என்பதை நீங்கள் கண்டித்து மாறுவதற்குப்பதிலாக நாங்களே மாறிக்கொள்கிறோம்என்பது கணக்கில் சேரும்.**
- ✡ **அப்படிச் சொல்வது ஆர்வம் (aspiration).**
- ✡ **ஆர்வம் எப்படி எழுகிறது? ஆர்வம் என்பதென்ன?**
- ✡ ***பிரம்மம் சிருஷ்டியுள் வந்தது, மீண்டும் அதன் இடத்தை அடைய எழும் சக்தி ஆர்வம்.***

✡ ஏன் குழந்தை வளர்கிறது? விதை முளைக்கிறது? இந்த சக்தி முளையில் இலையாக, குழந்தையில் வளர்ச்சியாகக் காண்கிறது.

✡ கண்டித்தால் திருந்துவோம்எனக் கூறுவது ஆர்வம்.

✡ வீட்டில் நடப்பதைக்கண்டு, எங்களுக்கு அன்னை வேண்டும்என்பது ஆர்வம்.

✡ ஆர்வத்தின் நிலைகள் பல, ஆனால் ஆர்வம் ஒன்று.

✡ பிறப்பில் காணும் சக்தி ஆர்வம், இறப்பில் காண்பதுவும் ஆர்வம்.

✡ மனிதனுக்கு ஒன்று சரி, மற்றது சரியில்லை.

✡ சத்தியஜீவியத்தையடையும் ஆர்வமும், ஜடம் அசையும் ஆர்வமும் ஒன்று என்றறிவது பிரம்மஞானம்.

✡ இரண்டும் அனந்தமான சக்தியானதால் சமம்.

பார்ட்னர் - பெரிய இடத்திற்குச் சமமாக நாம் உயர்வது சாத்தியமா?

✡ பெண், மனம் காற்றில் பறக்கிறது என்றாள். பெரியவன் பெரிய அந்தஸ்து வந்துவிட்டது என்றான். தாயார் இவையிரண்டும் பணத்தைவிட உயர்ந்தவை. எல்லா அன்பர்கட்கும் வந்தது. காப்பாற்றியவர் குறைவு. இல்லைஎன்று கூறலாம்என்றார். கணவர் பெரிய இடங்களில் பழகத் தெரியவில்லைஎன்றபொழுது பார்ட்னர் மேற்கூறிய கேள்வியைக் கேட்டார்.

✡ இதில் கருதவேண்டியவை சில:

1. வந்ததைக் காப்பாற்றவேண்டும்.
2. பெரிய இடத்திற்குச் சமமாக உயரவேண்டும்.
3. உயராவிட்டால் வந்தது போய்விடும்.
4. சமயத்தில் மானம் போகும்.
5. இவற்றுள் புதைந்துள்ள தத்துவங்களைக் காணவேண்டும்.



✡ பெரிய இடம், சமூகத்தில் பெரிய இடம். அன்னைஜீவியத்திற்குப் பெரிய இடமில்லை. அன்னைஜீவியமிருந்தால் நாம் பெரிய இடத்திலும் முக்கியமாக இருப்போம்.

✡ அந்தஸ்தைக் கொடுத்த அன்னைஜீவியம், அதற்குரிய அடிப்படை இலட்சணங்களைக் கொடுத்துவிடுகிறது. நம் பங்கு அவற்றை நல்ல முறையில் வெளிப்படுத்தக் கற்றுக்கொள்ளவேண்டும். பணம், படிப்பு, அந்தஸ்து முக்கியம். தாழ்ந்தோருக்கு அவையில்லை. சமூகம் வளரும் பொழுது வாய்ப்பு அதிகரிப்பதால் தாழ்ந்தவர் அவற்றைப் பெறுகின்றனர். அவற்றைப் பெற்றபின் வீடு, உடை, மொழி, பழக்கம், பண்பு, ஆகியவற்றை அவர் முயன்று பெறவேண்டும். அவை தோற்றம். இவைகட்கெல்லாம் மையமாக இருப்பது ஜீவியத்தின் அகந்தை ego of social consciousness. அகந்தை எளிதில் பழையபடிச் செயல்படும். அகந்தையை உயர்ந்த நிலைக்கு உயர்த்துவது சிரமம். ஜீவியம் உயர்ந்தபின் பழைய அகந்தையை நாம் விட்டுவிட்டால், புதிய ஜீவியம் அகந்தையின்றிச் செயல்படும். தவறு வாராது. புதிய நிலைக்குரிய அகந்தையைப் பெற முயலாவிட்டால் அடக்கம் எழும். நடைமுறையில் பழைய அகந்தையை புதிய நிலையில் வெளிப்படுத்துவது வழக்கம். அது அசம்பாவிதமாகும்.

❀ ஜீவியத்தை அன்னை வளர்த்தால் நாம் அகந்தையை வளர்க்க முயன்று ஜீவியத்தை இழக்கிறோம்.

❀ ஜீவியம் வளரும்பொழுது அகந்தையை அழித்து வளரும்.

❀ ஜீவியம் செயல்பட அகந்தை தேவையில்லை. தடையாக இருக்கும்.

❀ எதை அழிக்க அருள் வருகிறதோ அதைப் பயன்படுத்தி அதற்கு எதிரானதை வளர்க்க முயல்வதின் விளைவு இது.

❀ தடையைத் தகர்த்து எழும் வளர்ச்சியைப் பயன்படுத்தி ஏன் மனிதன் தடையை வளர்க்கிறான்?

❀ உடலிலிருந்து மனத்திற்குப் போவது வளர்ச்சி. வளர்ச்சிக்குரிய பழக்கம் உடலிலிருக்கிறது. மனத்தில் அப்பழக்கம் வரவில்லை. வெளிநாடு போனால் அம்மொழி கொஞ்சம் கற்றுக்கொண்டால் தெரிந்தவரை பேசுகிறோம். மேலே தாய்பாஷை வருகிறது. வெளிநாடு போகுமுன் தேவைப்பட்ட அளவு அம்மொழியை அறிவது அந்நாட்டைப் பெரிதும் அறிய உதவும்.

தாயார் - வேலை உள்ளேயிருக்கிறதுஎன்பது அதுதான்:

✡ பெரிய இடத்து அழைப்பு வந்தால் டென்ஷன் வருகிறதுஎன்பது கணவர் பிரச்சினை. வந்தபின் அழைப்பை மேற்கொண்டால் அமைதி வரும்என்பதும் அவர் அனுபவம்.

✡ வேலை உள்ளேயிருக்கிறதுஎன்பது Self-conception தன்னிச்சையாக பிரம்மம் செயல்படுவதின் பிரதிபலிப்பு.

✡ தத்துவம்: பிரம்மம் தன் இச்சையால் ஒரு ரூபத்தை (சொரூபத்தை) உற்பத்தி செய்கிறது. சொரூபம் சுபாவத்தைத் தாங்கிவருகிறது. சுபாவம் சொரூபத்தின்மூலமாக வெளிப்பட சலனம் தேவை. அது சுமுகமான சலனமானால், உரிய சந்தர்ப்பத்தில் உரிய முறை வழியாகச் சுபாவம் சொரூபத்தால் வெளிப்படுவது சிருஷ்டியின் சுருக்கம்.

✡ கணவருக்காக வந்தது பெரிய இடத்து அழைப்பு. அது சந்தர்ப்பம். அவருக்கு டென்ஷன் வருவது சுபாவம். அழைப்பு ரூபமுடையது. அவர் தம் இச்சையாகச் செயல்படுவதற்கு choice உண்டு. டென்ஷன் ஒரு புறம்; அமைதி அடுத்த பக்கம். Choice அவருடையது. டென்ஷனை அமைதியாக்குவது உள்ளே அவருடைய வேலை. விருந்துஎன்ற இடத்தில் நடக்கும் செய்திகள் அவருக்கு உள்ளே பெருஞ்சலனம் தரும். அவருடைய நடத்தை, பேச்சு, எண்ணம், ஆகியவை அவருடைய உள்சந்தர்ப்பங்கள்.



❀ டென்ஷனுக்குப் பலன் அவமானம்.

❀ அமைதிக்குப் பலன் அந்தஸ்து.

❀ இரு பலன்கட்கும் முறை ஒன்றுதான்.

❀ முடிவு நம் கையில் choiceஆக இருக்கிறது.

❀ பிரம்மத்தின் செயலும், நம் செயலும் ஒன்றே.

❀ அதற்குக் காரணம் நாமும் உள்ளே பிரம்மம்.

❀ நாம் பிரம்மமாக இருக்கலாமா, மனிதனாக இருக்கலாமாஎன்பது நம் choice.

❀ மனிதன் செய்வது படபடப்பு; பெறுவது அவமானம்.

❀ பிரம்மம் செய்வது அமைதி; பெறுவது அந்தஸ்து.

❀ வேலையை வெளியிலிருந்து உள்ளே கொண்டுபோவது முதற்கடமை.

❀ Choice அடுத்தது.

❀ அமைதிமூலம் choice செயல்பட பொறுமையாக இருப்பது பலன் தரும்.

கணவர் - நாம் அடிப்படையில் மாறவேண்டும், அளவுகடந்து உயர வேண்டும். அபரிமிதமான பெரியமனசு வேண்டும். இது சரியான திருவுருமாற்றம். ஏன், அன்னையிருந்தவரை தமிழ்நாடு அவரை அறியவில்லை? உலகம் அறியவில்லை என இப்பொழுது விளங்குகிறது. மனிதன் மட்டமானவன், சிறியவன், இவனால் உயரமுடியாது:

✡ எந்த மகானும் அவரிருந்த காலத்தில் அவரூரில் பிரபலமாக இல்லை. இது அனுபவம். இதனுள் உள்ள தத்துவம், ''விளக்கின் அடியில் இருட்டு''என்பது. ஏன் விளக்கின் அடியில் இருட்டு இருக்க வேண்டும்?

- ❀ சிருஷ்டி இரட்டையாலானது.
- ❀ ஒளியின் அருகில் இருட்டு இருப்பது சிருஷ்டியின் தத்துவம்.
- ❀ மீண்டும் ஏன் இந்தத் தத்துவம்?
- ❀ மனிதன் மனத்தால் செயல்படுகிறான்.
- ❀ மனம் பொருளையோ, விஷயத்தையோ முழுமையாகக் காண முடியாது. பகுதியாகப் பிரித்து ஒரு பகுதியை ஒரு சமயத்தில் காணும்.
- ❀ ஏன் மனம் இத்தன்மையானது?
- ❀ ஞானம் அஞ்ஞானமானால், பிரம்மம் அதனுள் ஒளியலாம்.
- ❀ ஞானம் அஞ்ஞானமாக மனம் பகுதியான கருவியாக உதவுகிறது.
- ❀ மனம் முழுமையாக இருந்தால் அஞ்ஞானம் ஏற்படாது.
- ❀ அஞ்ஞானம் ஏற்பட மனம் பகுதியாகச் செயல்படுகிறது.
- ❀ ஞானமான மகானை அஞ்ஞானமாக மனிதன் அறிவதால் - அவன் மனம் அஞ்ஞானத்தைமட்டும் காண்பதால் - சிருஷ்டி செயல்பட முடிகிறது.

✡ அன்னையை உலகம் அறியாததும், தமிழ்நாடு அறியாததும், புதுவை அறிய மறுத்ததும் மனிதன் தன் choiceஐ அஞ்ஞானத்திற்கு விரும்பிக்கொடுப்பதாகும்.

✡ அடிப்படையில் நாம் மாறவேண்டும்என்பது நம் choice ஞானத்திற்கு வரவேண்டும்.

✡ மனிதன் உயருவது, அஞ்ஞானத்தில் உயருவான். அபரிமிதமான பெரிய மனம் அஞ்ஞானத்தைக்கடந்து ஞானத்தை எட்டவல்லது.



✡ மற்றவர் கண்ணோட்டம்என்பது இதுவே.

✡ மனிதனால் உயரமுடியாதுஎன்றால், அவனுக்கு உயரப்பிடிக்கவில்லை எனப் பொருள்.

✡ இக்குடும்பத்தில் ''நான் ரங்கன் மந்திரியாக வேண்டும்என்று சொன்னால், அவன் மந்திரியாகிவிடுவான்எனில், நான் அப்பாவத்தைச் செய்யமாட்டேன்''என்ற மனம் ஆட்சி செய்கிறது. அங்குப் பெரிய மனம் அவசியம்.

பார்ட்னர் - சைத்தியப்புருஷன் ஜீவாத்மாவைவிட நமக்குப் பலன் தருவதிலும், உண்மையிலும் உயர்ந்தவன்என்பதை அறிய விரும்புகிறேன்:

✡ அவசரக்காரன், கோபக்காரன், திறமையற்றவன், மடையன் ஆகியவர் வாழ்வைச் சேர்ந்தவர். நிதானமானவர், சாது, திறமைசாலி, புத்திசாலி ஆகியவர் ஆன்மவளர்ச்சியுள்ளவர். இங்கு ஆன்மாஎன்பது ஜீவாத்மாவைக் குறிக்கும். சாது மிரண்டால் காடு கொள்ளாது. நிதானம் ஒரு சமயம் தவறும், புத்திசாலி புத்தியில்லாமலும் சில காரியங்களில் நடப்பதுண்டு. நிதானமான சாது திறமையும், புத்தியும் நிறைந்து இருப்பதுடன், சில சமயங்களில் இனிமையாகவும், இதமாகவும், கனிவுடனும் இருப்பதுண்டு. அப்படிப்பட்டவருக்குக் கோபமே வாராது. அவர் நிதானம் எப்பொழுதும் தவறாது. அவர் கையால் செய்த எந்த வேலையும் தவறியதில்லை. எதிரியுடனும் இனிமையாக இருப்பவர் அவர்.

- ❀ முதலில் சொல்லியவர் வாழ்வுக்குரியவர்.
- ❀ அடுத்தாற்போல் சொல்லியவர் ஆத்மாவுக்குரியவர்.
- ❀ முடிவாகக் கூறியவர் சைத்தியப்புருஷனுக்குரியவர்.

✡ மனிதன்என்பவன் உடல், உயிர், மனம், ஆன்மாவாலானவன். இவ்வுடலும், உயிரும், மனமும் ஆன்மாவின் வெளிப்பாடுகளே. ஏனெனில், அனைத்தும் ஆன்மாவே. உடல் உழைப்பால் உயிர் வெளிப்படுகிறது. உயிர் உழைப்பதால் மனம் ஏற்படுகிறது. மனம் உழைத்தால் ஆன்மா வெளிவருகிறது. இதற்குப் பரிணாமம்எனப் பெயர்.

- ❀ உடலிலிருந்து உயிரும், மனமும் வெளிவருவதுபோல் ஆன்மாவில் இருந்து முடிவாக வெளிவருவது சைத்தியப்புருஷன். உடலுக்குரிய சைத்தியப்புருஷன்.
- ❀ அதே போல் சைத்தியப்புருஷன் உயிரிலிருந்தும், மனத்திலிருந்தும் வெளிவரும். அவை உயிருக்குரிய சைத்தியப்புருஷன், மனத்திற்கு உரிய சைத்தியப்புருஷன் எனப்படும்.
- ❀ மனத்தின் சைத்தியப்புருஷன், உயிரின் சைத்தியப்புருஷன், உடலின் சைத்தியப்புருஷன் ஆகியவை சேர்ந்தது (Central psychic being) சைத்தியப்புருஷனாகும்.

✡ ஜீவாத்மா பாங்கில் உள்ள நம் டெப்பாசிட்போன்றது. சைத்தியப்புருஷன் வியாபாரத்தில் போட்ட முதல் போன்றது. பாங்கில் டெபாசிட் இருப்பது நல்லது.

- ❀ பாங்க் டெப்பாசிட் வட்டி தரும்.
- ❀ வியாபாரத்தில் உள்ள முதல் இலாபம் தரும்.
- ❀ பாங்கில் பணம் பத்திரமாக இருக்கும்.
- ❀ வியாபாரத்தில் ரிஸ்க் உண்டு.
- ❀ இலாபம் வரும் இடத்தில் நஷ்டமும் வரும்.
- ❀ இலாபம் உபரியானால் வட்டியைப்போல் பல மடங்காகும்.
- ❀ பாங்க் டெப்பாசிட் மெதுவாக வளரும். வியாபாரத்தில் முதல் விரைவாக வளரும்.



கணவர் – Punctualityயை உதாரணமாக்கிச் சொல்லேன்:

✡ சைத்தியப்புருஷனுக்கும், ஜீவாத்மாவுக்கும் உள்ள வித்தியாசத்தை தாயார் விளக்கியவுடன் கணவர் punctualityமூலம் அதைச் சொல்லச் சொல்கிறார்.

✡ மிக எளிமையாகச் சொன்னால்,

- ❀ பணம் நகையாக வீட்டிலிருப்பதை, ஜீவாத்மாவுக்கும்;
- ❀ பணம் முதலாகக் கடையில் நடமாடுவதை சைத்தியப்புருஷனுக்கும் உதாரணமாகக் கூறலாம்.
- ❀ நகையாகவோ, வேறு எந்த ரூபத்திலும் பணம் சேமிப்பாக இல்லாத வீடு ஆத்மா இல்லாத மனிதனுக்கு உதாரணம்.

✡ எளிய மனிதனுக்கு ஆத்மா தெரியாது, இருக்காது. ரிஷிக்கு ஆத்மாவுண்டு, தெரியும். ரிஷிக்குள்ள ஆத்மா சொத்து, வீட்டிலுள்ள பணம், நகைபோன்றது. அவை சம்பாதிக்கா. சைத்தியப்புருஷன் வளரும் ஆன்மா எனப்படும். வீட்டிலுள்ள பணம் கடைக்குப் போய் பெருகுவது போல் ஆன்மா வளர்ந்தால், அது சைத்தியப்புருஷனாகும். அதனால் சைத்தியப்புருஷன் ரிஷியைவிட உயர்ந்த நிலை.

✡ நல்ல குரல் உள்ளவருக்குப் பாட்டு வரும். பாட்டு கற்றால், பாடினால், பயின்றால் வளரும். பயிலாவிட்டால் வளராது. திறமையிருப்பது வேறு. அது வளர்ந்து பயன்படுவது வேறு.

✡ Punctualityஎன்று ஒன்றிருப்பதே பெரும்பாலோர் அறியமாட்டார்கள். Punctuality உள்ள இடங்களில் படித்து, அதன் அருமை தெரிந்தவர் பலருண்டு. ஆனால், அவர்கள் ஒரு ஸ்தாபனம் நடத்தினால் அங்கு punctualityயைக் கடைப்பிடிக்கமாட்டார்கள். கடைப்பிடிப்பவர் சைத்தியப்புருஷன்போல; தெரிந்து பின்பற்றாதவர் ஜீவாத்மாபோல.

✡ ஜீவாத்மாவையும், சைத்தியப்புருஷனையும் மேற்சொன்னதுபோல் பல உதாரணங்கள்மூலம் கூறலாம்.

| ஜீவாத்மா | சைத்தியப்புருஷன் |
|---|---|
| 1. புத்திசாலித்தனம் | படிப்பில் வெளிப்படும் புத்திசாலித்தனம். |
| 2. செல்வம் | பலருக்கும் பயன்படும் செல்வருடைய செல்வம். |
| 3. பூமிக்கு அடியிலுள்ள நீர் | பயிருக்கு இறைக்கப்படும் தண்ணீர். |
| 4. அன்புள்ள பெற்றோர் கடமையைச் செய்துவிட்டு சும்மாயிருப்பவர் | அன்பைச் செயலில், பிரியமாக, பரிசாக, பரிவாக, கனிவாக, கவனமாக வெளிப்படுத்தும் பெற்றோர். |
| 5. நாட்டிலுள்ள நிலக்கரி, இரும்புபோன்ற கச்சாப் பொருள்கள். | அவற்றைத் தோண்டி எடுத்து மக்களுக்குப் பயன் படுத்துதல். |
| 6. படித்தவர், ஓட்டுப் போடாமலிருப்பது | படித்தவர் நல்லவனைத் தேர்ந்தெடுத்து ஓட்டுப் போடுவது. |
| 7. வீட்டில் தூங்கும் பணம் | அது பாங்க் டெப்பாசிட்ஆகி மக்களுக்குப் பயன்படுவது. |

கணவர் - ...ஓர் இடத்திலும் பணத்தைப்பற்றிப் பேச்சே எழவில்லை. இடம் பெரியது என்பதால் எவரும் கேட்கவில்லை:

✡ "நீங்கள் பொய் சொல்லக்கூடாதுஎன முடிவுசெய்தால், நான் பொய் சொல்லும் சந்தர்ப்பம் தரமாட்டேன்"என்று அன்னை கூறுகிறார்.

- ❀ பொய் சொல்ல நிர்ப்பந்தம்என்பது என்ன?
- ❀ நாம் பொய் சொல்லப் பிரியப்படுவதே அந்த நிர்ப்பந்தம்.
- ❀ சந்தர்ப்பம் என்னைக் கட்டாயப்படுத்துகிறதுஎன்று நாம் கூறுவது சரியில்லைஎன அன்னை கூறுகிறார்.

✡ திருடு போகாத நாளில்லை, திருடு போகாத பொருளில்லை, திருடாத ஆளில்லைஎன்ற இடத்தில் காவலேயில்லாமல் பல மாதங்கள் மகசூல் இம்மியளவும் திருடு போகாமலிருந்தது நம் அனுபவம். அன்னையை



தினமும் சந்திப்பவர் வாரம் இருமுறை வந்து பார்த்துவிட்டு அன்னையிடம் அங்குள்ள நிலவரத்தைக் கூறிக்கொண்டிருந்ததால், அந்தச் சொத்திற்கு அன்னைச்சூழல் வந்து காவலாக அமைந்தது. எந்தச் சொத்திலும் நாம் பொருள்களைச் சமர்ப்பணம் செய்தபடி இருந்தால், அதே சூழல் வரும்.

- ❀ திருடு போகாது.
- ❀ பொருள்கள் விரயமாகாது, சிந்தாது, உடையாது.
- ❀ காரியங்கள் விரைவாக நடக்கும்.

✡ இதில் தத்துவம் என்ன?

- ❀ கர்மம்என்ற நிர்ப்பந்தமில்லைஎன்பது தத்துவம்.
- ❀ முடிவு நம்முடையது.
- ❀ நிறைவேற்றுவது அன்னை.
- ❀ கர்மம் தானே விலகுகிறது.
- ❀ வேண்டாத சந்தர்ப்பங்கள் தாமே விலகுகின்றன.
- ❀ முடிவு நம்முடையதுஎனில் அகந்தையின் முடிவன்று.
- ❀ முடிவு நம்முடையதுஎனில் ஜீவாத்மாவினுடையது.
- ❀ அதுவும் வளரும் ஜீவாத்மாவான சைத்தியப்புருஷனுடையது.
- ❀ ஜீவாத்மா வளர்ந்து சைத்தியப்புருஷனாகி, பரமாத்மாவாகிறது என்பதால் நம் முடிவு பரமாத்மாவின் முடிவாகிறது.
- ❀ முடிவு பரமாத்மாவினுடையது என்பதால் நிறைவேறுமா என்பது இல்லை. தானே நிறைவேற்றிக்கொள்ளும்.
- ❀ தானே நம் முடிவு தன்னை நிறைவேற்றிக்கொள்ளும்என்பதை அன்னை நிறைவேற்றுவார் என்கிறோம்.
- ❀ நாமே நிறைவேற்றிக்கொள்வது நம்பிக்கை செயல்படுவதால். அன்னை நிறைவேற்றுவது அருள் செயல்படுவதால்.

டிபுடி கலெக்டர் - இது முற்றிய கான்சர். குணமாகும்என உங்கள் அம்மா கியாரண்டி கொடுப்பார்களா?...

தாயார் - அதெல்லாம் நட்புக்குரியது. பக்தி பவித்திரமானது. நட்பையும் பக்தியையும் இணைக்கலாமா?

✡ இந்த 3, 4 பக்கங்களில் குதர்க்கமாக, விதண்டாவாதமாகப் பேசுபவர்கள் தாயாரைச் சந்தித்து, அவர் அவர்களுக்குப் பதில் சொல்லாதபொழுது, கான்சர் தானே குணமாவதால், மீண்டும் வந்து மறுபடியும் அதே தொனியில் அடக்கமாகப் பேசிப்போகின்றனர். அவருக்கு முழுவதும் குணமாகிறது. வீட்டில் ஏராளமான தொந்தரவுகள் எழுகின்றன. பிரச்சினையை உற்பத்திசெய்தவர் கணவர்.

✡ இந்நிகழ்ச்சியில் தத்துவம் ஏதேனும் உண்டா?

- ❀ தத்துவமில்லாத இடமேயில்லை.
- ❀ கான்சர் குணமாவதுஎன்பது ஒரு செயல், சாதனை. சாதனைக்குரிய சட்டங்களைப் பின்பற்றாதவருக்குச் சாதனையில்லை.
- ❀ இங்குச் சாதனைஎன்பது கான்சரை அருளால் குணப்படுத்துவது.
- ❀ மனிதன் அறிவால் செய்யமுடியாததை (செய்யமுடிந்ததையும்) அருள் முடிப்பது சாதனை.
- ❀ அருள் செயல்பட்டால், எதுவும் முடியும்.
- ❀ அதற்குரிய முறை அருளைச் செயல்பட வைக்கும் முறை - நம்பிக்கை.
- ❀ நம்பிக்கை அடக்கத்தால் செயல்படும்.
- ❀ ஏன் நம்பிக்கை செயல்பட அடக்கம்வேண்டும்?
  - ☆ இரயிலில் போக இரயில் போகும்என நம்பவேண்டும்.
  - ☆ டிக்கட் வாங்கிக்கொண்டு இரயிலில் ஏறி உட்காரவேண்டும். இரயில் போனபின் வரக்கூடாது. ஓடும் இரயிலில் ஏறக்கூடாது. இரயில் கூரைமீது உட்காரக்கூடாது. இரண்டு பெட்டிகளுக்கு இடையில் கப்ளிங்மீது உட்காரக்கூடாது. உட்கார்ந்து இதுவும் இரயில்தானேஎனப் பேசக்கூடாது. அடக்கமாக, அமைதியாக, இரயிலில் ஏறி இடத்தில் உட்கார வேண்டும். எந்த வேலை செய்யவும் அதற்குரிய நம்பிக்கை, அதற்கு வேண்டிய அடக்கமில்லாமல் செய்யமுடியாதுஎன்பது அதற்குரிய சட்டம். அடிப்படை சட்டம்.



- ☆ இங்கு அருள் செயல்படவேண்டும்.
- ☆ அருள் இறைவன் செயல்.
- ☆ இறைவன் தன்னிச்சையாகவே செயல்படுவான்.
- ☆ நாமாக அவனைச் செயல்பட வைக்கமுடியாது.
- ☆ நம் வீட்டுமாடிக்குக் காக்கையை வரவழைக்கமுடியாது.
- ☆ அது சாப்பிடக்கூடிய பொருள்களை மாடியில் வைத்தால் காக்கைகள் வரும்.
- ☆ நம்பிக்கை, அடக்கம் உள்ள இடத்தில் அருள் செயல்படும்.
- ☆ நாம் அவற்றை ஏற்றுக்கொண்டால் அருள் நம்மை நோக்கிவரும்.
- ☆ நமக்கு கான்சர் இருந்தால், நமது நம்பிக்கை அருளை ஈர்க்கும், கான்சர் குணமாகும்.
- ☆ கான்சர் அருளால் குணமாகும்என்பது நம்பிக்கை.
- ☆ குணமாகாதுஎன நான் நிரூபிக்கிறேன்என்பவரைப்பற்றிப் பேசவேண்டியதில்லை.
- ☆ எதிர்த்துப் பேச ஏராளமான நம்பிக்கைவேண்டும்என்பது தத்துவம்.
- ☆ நாம் "நான் திருடவேமாட்டேன்", "ஏமாற்றமாட்டேன்"என அடிக்கடிப் பேசுவதில்லை.

- ❀ அதுவரை திருடியவன், ஏமாற்றியவன், அவற்றைக் கைவிட்டபின் அப்படிப் பேசுவான்.
- ❀ உள்ளே திருடும், ஏமாற்றும் உயிரோடு இருப்பதால் அவன் அதையே நினைக்கிறான்.
- ❀ அதனால் அவனிடமும் அருள் அதிகமாகச் செயல்படும்.
- ❀ அவன் தவறாகப் பேசுவதால் வீட்டில் தவறானவை நடக்கும்.
- ❀ 1940முதல் 1960வரை தமிழ்நாட்டில் தீவிர நாத்திகப்பிரசாரம் நடந்தது. அதன் விளைவாக இன்று எல்லாக் கோவில்கட்கும் மக்கள் ஏராளமாகப் போகிறார்கள். நாத்திகனுடைய பக்தி உண்மையானது, ஆழமானது.
- ❀ டிபுடி கலெக்டரும், A.G's ஆபீஸ் A.O.வும் அப்படிப்பட்டவர்கள். அதனால் முதல் 15 நாட்களில் பெரும்பாலும் குணமான கான்சர், பின்னால் முழுவதும் குணமாய்விட்டது.
- ❀ கணவர் இந்த விவரங்களோ, சூட்சுமமோ தெரியாதவர். தம் மனைவி கான்சரைக் குணப்படுத்துவார்எனக் கூறியதால் விவாதம் எழுந்தது.
- ❀ இப்படிக் குதர்க்கமாகப் பேசுபவர்களை வியாபாரிகள், அரசியல்வாதிகள் சாதுர்யமாக மடக்குவார்கள்.
- ❀ கான்சர் நோயாளி தாயாரை அறியாதவர். அவரே வந்து கேட்கப் போவதில்லை. பிரச்சினையை கணவர் உற்பத்தி செய்துவிட்டார்.
- ❀ பொதுவாக அன்பர்களிடம் இதுபோன்ற ஒருவர் பேசினால் அதற்குரிய பதில் அன்பருக்கு மனதில் உதயமாக வேண்டியது ஒன்றுண்டு, *"என் மனம் குதர்க்கமாக இருப்பதால், என்னிடம் ஒருவர் இப்படிப் பேசுகிறார்"* என்று அன்பர் அறியவேண்டும். அதை மனம் ஏற்றவுடன் அடுத்தவர் அக்கேள்வியைக் கேட்பதை நிறுத்திவிடுவார்.
- ❀ ஏன் தாயாரிடம் இக்கேள்வி வந்தது?



- ❀ தாயாருடைய நிலை குதர்க்கமான நிலை. பக்தியில்லாத குடும்பம் அருளால் பலன்பெற விரும்புவது குதர்க்கம். குடும்பம் பக்தியுடன் அன்னையை ஏற்கவேண்டும்என அவர் பிரார்த்திக்கலாம். அதைவிட, தாயார் தம் மனமாறுதலை ஆழ்ந்து ஏற்றால் குடும்பம் மாறும். அதற்குமேல் அவரால் எதுவும் செய்யமுடியாது. செய்ய முடியாதுஎன்ற நேரம் செய்ய முயல்வது குதர்க்கம். அதனால் டிபுடி கலெக்டர் குதர்க்கமாகப் பேசுகிறார்.
- ❀ டிபுடி கலெக்டரும், நோயாளியும் அன்று பேசியதைப் பிள்ளைகள், கணவர் பேசுவதுடன் ஒப்பிட்டுப்பார்த்தால், அடிப்படையில் ஒன்றாக இருப்பதைக் காணலாம்.
  - ✰ எல்லோரும் அன்னையை ஏற்கவேண்டும்என்றால் ஒரு பையன், "அம்மா சொல்படி நடக்கவேண்டும்என்று சொல்லுங்களேன்" என்கிறான்.
  - ✰ கணவர் தொழிலாளர் தலைவனை நீக்கும்பொழுது, "எந்தச் சட்டமும் பேசவேண்டாம். முதலில் அவனை விலக்கி ஆர்டர் அடித்துக் கொடுத்து அனுப்புங்கள்"என்கிறார்.
  - ✰ சிறியவனுடைய பாட்மிண்டன் டீம் ஜெயித்தபின், பெரியவன் அவனை நம்பாமல் மற்றொருவனிடம் கேட்டறிந்தபின், தன் தோல்வியை ஒப்புக்கொள்ளாமல் வெளியே போகிறான். தோல்வியை ஏற்காதது குதர்க்கம்.

பார்ட்னர் வந்தார். முகமும், உடலும் கனிந்துபோய் பழுத்தபழமாக இருந்தார்:

- ✡ இளம் பிள்ளை, வளரும் பருவத்தில் (physical energy) பொங்கிவருவது முகத்தில் தேஜஸாகவும், உடலில் பளபளப்பாகவும், மனத்தில் மலரும் சந்தோஷமாகவும் தெரிகிறது.

✡ இளம்ஆன்மா, அது வளரும் பருவத்தில் இதே மாறுதல்களை அடுத்த உயர்ந்தகட்டத்தில் பார்ட்னரில் வெளிப்படுத்துகிறது. நெஞ்சு சந்தோஷத்தால் நிறைவது நிறைவு. ஜீவன் சாதனையால் நிறைவது பூரணம் பூரிப்படைவது. பார்ட்னர் நிலை அதுவே. இதன் தத்துவம் ஏதேனும் உண்டா?

✡ உடலுக்குத் தேவை உணவு. போதுமான உணவு கொடுத்தால் உடல் வளமாக இருக்கும். மூளைக்குத் தேவையானது அறிவு, போதுமான அறிவும், சிந்தனையும் மனத்தைச் சிறக்கச்செய்யும். ஜீவனுக்குத் தேவையானது நம்பிக்கை, பக்தி. இரண்டும் சத்தியம் வாழ்வில் வெளிப்படும் உருவங்கள். 50 ஆயிரம் ரூபாயை 50, ஆயிரம் ரூபாய் நோட்டாக மாற்றினால் சட்டைப்பையில் வைத்துக்கொள்ளலாம். 50 ஆயிரம் ஒரு ரூபாய் நாணயமாக்கினால் பெட்டி கனக்கும். பார்ட்னருக்கு ஆன்மீகம் புதியது. பக்தி, நம்பிக்கையுடையவர் என்பதால் அதிகம் உள்ளே வந்துவிட்டது. வந்தது ரூபாய் நாணயமாக வந்ததால் நெஞ்சு கனக்கிறது. ஆத்மா பக்குமானால் ரூபாய் நாணயம் நோட்டாகும், கனக்காது. ஓர் ஆயிரம் டாலர் நோட்டின் மதிப்பு 50,000 ரூபாய், ஒரு வைரக்கல்லும் 50,000 ரூபாய் பெறும்.

✡ பார்ட்னருக்கு உள்ளே வந்த மாற்றம், தாயார் கனவில், பாக்டரி நாட்டில் பல இடங்களில் பரவுவதைக் கண்டது; பாங்க் சேர்மன் பார்ட்னருடைய நிலையைப் போற்றிப்புகழ்வது; அதற்குரிய தொழில் அதிபர்களை அறிமுகப்படுத்த முன்வருவது; ஆகியவை பார்ட்னருக்கு அதிகம். இந்த நேரம் அவர் கணவருடன் பேசி மகிழ்ந்தால், அம்மகிழ்ச்சியே பலனாகும், வந்தது பலிக்காதுஎன அறிவதால் அவர் பேசாமலிருக்கிறார்.

- ❀ அவர் பேசாமலிருப்பது கணவருக்குத் தாங்கவில்லை.



- ❀ தாங்கவில்லைஎன கணவர், பார்ட்னரைப் பேசவைத்தால், விஷயம் கெட்டுப்போகும். விஷயம் கெடாவிட்டால் கணவரால் தாங்கமுடியாத விஷயம் வரும்.
- ❀ அருள் செயல்பட்டு பார்ட்னர் போனில் கூப்பிடும்பொழுது கணவரால் பேசமுடியாமற் போய்விட்டது.
- ❀ இது சூட்சுமலோக இரகஸ்யங்கள்.
- ❀ இவற்றை அறிவது சூட்சுமஞானம்.
- ❀ நடைமுறையில் பயன்படுத்துவது சூட்சுமஅதிர்ஷ்டம்.
- ❀ Life Response எழுவது இந்த இடத்தில்தான்.
- ❀ பார்ட்னருக்கு வாழ்வுக்குரிய பக்குவம் உண்டு. அது எவ்வளவு பெரியதானாலும், தாயாருக்குரிய பக்திக்கு ஈடாகாது.
- ❀ பார்ட்னர் அதை அறிந்து நடந்துகொள்கிறார்.
- ❀ கணவர், மனைவிஎன்ற உரிமையைக் கொண்டாடுகிறார்.

தொழிலாளர்கள் கேட்டதைக் கொடுத்தபின், வாங்க மறுத்து ஸ்டிரைக் வர இருக்கிறதுஎனக் கூறினார். தாயார் அதுபோன்ற நிகழ்ச்சிகள் முதலாளியிடமோ, மானேஜ்மெண்ட்டிடமோ உண்டாஎனக் கேட்டு அனுப்பினார். பல உண்டுஎனப் பதில் வந்தது:

✡ Rule of Correspondence தொடர்பின் சட்டம்என இதைக் கூறலாம். இதைக் கேள்விப்பட்டு ஆச்சரியப்பட்ட முதலாளி தாயாரைப் பார்க்க வருமுன் ஸ்டிரைக் வாபசாகிவிட்டது. என்ன தத்துவம் இங்கு செயல்படுகிறது?

எரிவதை இழுத்தால், கொதிப்பது நின்றுவிடும்,

என்பது புரிகிறது. இங்கு அதே சட்டம் செயல்படுவதை நாம் அறிவதில்லை. ஒருவன் என்னை வந்து திட்டுகிறான்என்பதை நான்

அவன் திட்டுகிறான்என அறிகிறேன். என்னுள் உள்ள கெட்ட குணம் அழிய முடிவுசெய்தபின், அது தானே அழிய முடியவில்லை என்பதால், அது அடுத்தவனை அணுகி, அவன் கெட்ட குணத்தை அசைத்து, "என்னை வந்து திட்டு"எனக் கேட்டுக்கொள்கிறதுஎன நாம் அறிவதில்லை.

கதையில் தொழிலாளிகள் கேட்டதைக் கொடுத்தபின், வாங்க மறுக்கிறார்கள்; ஸ்டிரைக் செய்கிறார்கள். முதலாளிகள், எவ்வளவு நேர்மையாக, திறமையாக ஒருவன் வேலை செய்தாலும், அவன் வேலையை மெச்சமாட்டார்கள், ஏற்கமாட்டார்கள்; அதிகாரம் செய்வார்கள். அதற்குரிய காலம் மாறிவிட்டதுஎன்பதை முதலாளியின் அடிமனம் அறிவதால், அப்பழக்கத்தை விட முடிவுசெய்தவர்கள் விட முடியாமல், தொழிலாளிகளின் அடிமனத்தை அணுகி, 'எங்களுக்குத் தொந்தரவு கொடுத்தால்தான் அறிவுவரும். தொந்தரவு கொடுங்கள்' என்று கேட்பதே இந்த ஸ்டிரைக்.

❀ இதைத் தாயார் அறிவார்.

❀ வீட்டில் அடங்காத பிள்ளையை ஊரார் அடக்குவர்.

'எனக்காகப் புத்தியில்லை, புத்தி வேண்டும்'என்ற நேரம் வந்துவிட்டதுஎன்று அறியும் மட்டபுத்திக்காரர், தம் கீழ் வேலை செய்பவர்களை, குழந்தைகளை இதுபோல் அடிமனத்தில் தூண்டுவதுண்டு.

- ✰ புத்தியில்லாதவருக்குப் புத்திவேண்டும்என்ற நேரம் வந்து விட்டதுஎன்று பொருள்.
- ✰ அந்த நேரம் எரிச்சல்படாமல், தொழிலாளி செய்வதே நாம் செய்வதுஎனப் புரிந்துகொண்டால் க்ஷணத்தில் பிரச்சினை முடியும்.
- ✰ மட்டமானவர்க்கு எவரையும் திட்டத் தோன்றும். திட்ட முடியாத சூழ்நிலையானால், தலைவலிக்கும், தலைபாரமாக இருக்கும், மயக்கம் வரும், வந்தால் தெளியாது. அவருக்கு இருவழிகள் உள்ளன. அனைவரும் சூட்சுமத்தை அறிந்து அவரைத் திட்டச் சொல்லி ½ மணி நேரம் கேட்டுக் கொண்டால், அவர் பிரச்சினைகள் தீரும். அல்லது அவர் நிலையைப் புரிந்துகொண்டு, அவர் அறிவு அவர் நிலையை ஏற்று மனத்தை உயர்த்த முடிவுசெய்தால், மனம் மகிழும், மலரும், மயக்கம் மறையும். மூன்றாவது முறையும் உண்டு. அவருடைய இரத்தபாசமுள்ளவர் - உடன் பிறந்தவர், மக்கள் - அவருக்காகத் தங்கள் குணங்களை (இதே குணம் அவர்களிடமிருக்கும்) மாற்றிக்கொண்டால் கொஞ்சகாலம் அவருக்குச் சிரமம் விலகும்.



தாயார் - உலகம் மனத்திற்குக் கட்டுப்பட்டது. மனம் மாறினால் மக்கள் மாறுவார்கள்;

தாயார் - நம்பிக்கை புறத்திலிருந்து எழுவதில்லை. அகத்திற்கு உரியது:

✡ ஆலை முதலாளி அன்னை சட்டத்தைக் கேள்விப்பட்டு ஆச்சரியப்படுகிறார். அனைவரும் ஒன்றேஎன்ற ஆன்மீகக் கருத்து நம் போன்றவர்க்குத் தெரியாது. நமக்கு நாம் வேறு, முதலாளி வேறு, தொழிலாளி வேறு. ஒவ்வொரு ஜீவனிலும் அனைத்து ஜீவன்களும் இருப்பது ஆன்மீகஉண்மை.

- ❀ 'நாமும், பிறரும் ஒன்று'என்று ஆழத்தில் எடுக்கும் முடிவு பிறர் செயலை நம் எண்ணத்திற்குக் கட்டுப்படுத்துகிறது.
- ❀ ஸ்டிரைக் வாபஸான வேகம் முதலாளியை ஆச்சரியத்தில் ஆழ்த்தியது.

❀ ஆச்சரியம் ஆச்சரியமாகும், அது நம்பிக்கையாக மாறும் திறனுடையதில்லை.

✡ அகந்தை - புருஷன் - பிரபஞ்சஆத்மா - பரமாத்மாஎன்பது தத்துவம்.

❀ பரம்பரையாக ஜீவாத்மா மாயை.

❀ மாயை விலகினால் ஜீவாத்மா கரையும்.

❀ நாம் பரமாத்மாவில் ஐக்கியமடைந்து மோட்சம் பெறுகிறோம் என்பது மரபு.

❀ ஸ்ரீ அரவிந்தம் ஜீவாத்மா அழிவற்றது,

பரமாத்மாவே ஜீவாத்மாஎன்கிறது.

❀ நாம் ஜீவாத்மாஎன அகந்தையைத் தவறாக உணர்கிறோம்.

❀ தவறு விலகினால், அகந்தை விலகும்.

❀ அகந்தை விலகியவுடன், நாம் புருஷன்என விளங்கும்.

புருஷன்என்பது பிரபஞ்சஆத்மாவாகும்.

பிரபஞ்சத்தை அகத்திலும் காணலாம்.

அகத்தில் பிரபஞ்சத்தையும், அதனுள் அதன் ஆத்மாவையும் காணலாம்.

அது பரமாத்மாவாகத் தெரியும்.

❀ ஜீவாத்மாவே பரமாத்மாஎன்பதால் நாம் (ஆலை முதலாளி) நம்மை நம்முள் மாற்றிக்கொண்டால், பிறர் (தொழிலாளிகள்) அவர்கள் செயலை மாற்றிக்கொள்வார்கள்.

❀ அதுவே நடந்தது. அது க்ஷணத்தில் நடக்கும்.

❀ பரமாத்மா காலத்தைக்கடந்ததுஎன்பதால் காரியம் க்ஷணத்தில் நடக்கும்.

❀ எதுவும் நம்பிக்கையைத் தாராது.

❀ நம்பிக்கை நம்பியின் ஞானம்.

அது அகத்துள் எழவேண்டும்.



பெரியவன் - எப்படியம்மா நம்பிக்கை வரும்?

✡ நம்பிக்கைஎன்பது ஆத்மஞானம்.

✡ மனம் அனுபவத்தை நம்பும்.

✡ ஆத்மா அனுபவப்படாததை நம்பும்.

✡ ஆத்மாவில் அந்த ஞானம் எப்பொழுதும் உண்டு.

✡ அதனுடைய சாயல் மனத்தில் படும்பொழுது அது நம்பிக்கையாகிறது.

✡ மனத்திற்கு நம்பிக்கையில்லை, உடலுக்கு நம்பிக்கையேயில்லை.

✡ ஒருவன் சம்பளத்தால்மட்டும் வாழ்ந்தால் அவன் உடை, உணவு, டாக்டர் செலவு, கல்யாணச் செலவு, எந்தச் செலவும் அந்தச் சம்பளத்திலிருந்தே வரவேண்டும். அதைத்தாண்டித் தனக்கு வருமானம் வரும்என அவனுக்குத் தோன்றாது. அவனுக்கே நிலம், வீடு, நகை, அன்பான குடும்பமிருந்தால் அவனுக்குச் சாப்பிட அரிசி வரும், வாடகை வரும், அவசரத்திற்கு நகையை அடகுவைத்து பணம் வாங்கலாம், மாமா வீட்டிற்குப் போனால் அனைவருக்கும் துணிமணி எடுத்துத்தருவார்கள். மனை வாங்கப் பணமில்லாமல் வாங்கவில்லை என அண்ணன் கேள்விப்பட்டால், அண்ணன் மனை வாங்கித் தருவான். அன்பான குடும்பம் அளவுகடந்த அதிர்ஷ்டம். அவனை ஒரு நண்பன் சம்பளம் வாங்கும்பொழுது ''இதை எனக்குக் கொடு"எனக் கேட்டால் கொடுத்து விடுவான். அதனால் அவனுக்குச் சிரமம் வாராது. சம்பளத்தைமட்டுமே நம்பி வாழ்பவன் அப்படிக் கொடுக்கமுடியாது. கொடுத்தால் சிரமப்படுவான்.

ஆத்மஞானம் ஆதரவான சூழ்நிலைபோன்றது.

✡ சரி, நம்பிக்கையில்லாதவனுக்கு எப்படி நம்பிக்கை வரும்?

✡ விடாமுயற்சியால் நம்பிக்கைவரும்என்கிறார் அன்னை.

✡ நம் பாதாளத்திற்கு நம்பிக்கையில்லை. அதற்கு நம்பிக்கைத் தர பரமாத்மாவால்தான் முடியும். தியானம் பரமாத்மாவை எட்டினால், பரமாத்மாவின் ஒளி பாதாளத்தை எட்டி, பாதாளத்திலும் நம்பிக்கையை ஏற்படுத்தும்என்பது *The Life Divine*.

✡ இந்த ஜன்மத்தில் நம்பிக்கையில்லாதவனுக்கு விடாமுயற்சியால் அடுத்த ஜன்மத்தில் நம்பிக்கைபிறக்கும். இந்த ஜன்மத்திலேயே நம்பிக்கை பிறக்கும் வழியுண்டா?

✡ உடல் ஜடமானால் அறிவு பெறாது, ஒளியை அனுமதிக்காது. இந்த ஜன்ம அனுபவம் அடுத்த ஜன்ம ஞானமாகும்.

✡ உடலால் செய்யப்படும் செயல் சமர்ப்பணமானால், உடல் ஒளியை அனுமதிக்கும்.

✡ சமர்ப்பணத்தின் ஒளி பரமாத்மாவைக்கடந்த Supremeஐயும்கடந்த பிரம்மத்தின் ஒளி.

✡ அவ்வொளி செயலை மாற்றும், உடலை மாற்றும், உடலின் அறிவை மாற்றும், நம்பிக்கை பிறக்கும்.

✡ வளர்ந்த ஆத்மாவுக்குரிய அடுத்த உடலை நாடுவது மறுபிறப்பு. ஆத்மா வளரும்பொழுது உடலும் வளர்ந்தால் - உடலிலுள்ள ஆத்மாவும் வளர்ந்தால் - உடலை மாற்றவேண்டிய அவசியமில்லை. மறுபிறப்பு இப்பிறப்பில் வரும்.

✡ விடாமுயற்சி உடலுக்குரியது. அதைப் பூர்த்திசெய்தால் உடலில் உள்ள ஆத்மா வெளிவந்து நம்பிக்கையைத் தரும்.

சிறியவன் - நல்லவனாக இருந்தால் நம்பிக்கை வரும்:

✡ நல்லவனாக இருப்பது (morality) மனத்தின் சிறப்பு. அதனால் பிறருக்கு நம்மீது நம்பிக்கை வரும். நம்பிக்கை ஆன்மாவுக்குரியது.



நல்லகுணத்தால் ஆன்மா வெளிவாராது. ஆன்மாவைப்பொருத்தவரை நல்லது, கெட்டது கணக்கில் சேராது.

நம்பிக்கையிருந்தால் ஆன்மா விழிக்கும்.
ஆன்மா விழித்தால் நம்பிக்கை எழும்.

✡ நல்லவனாக இருந்தால் பாட்டு வருமா? படிப்பு வருமா? விளையாட வருமா? அவையெல்லாம் வாராதுஎன்றால், நம்பிக்கைமட்டும் எப்படி வரும்? குரலிருந்தால் பாட்டு வரும், புத்திசாலித்தனமிருந்தால் படிப்பு வரும், சுறுசுறுப்புஇருந்தால் விளையாடவரும். ஆன்மவிழிப்பிருந்தால் நம்பிக்கைவரும்.

✡ அஞ்ஞானம் ஏழுவகையின. நம்பிக்கைஎன்பது அஞ்ஞானம் ஞானமாக மாறும் கட்டம். ஏழுவகை அஞ்ஞானம் யோகத்திற்குரியது. மனித வாழ்வு எளியது. மனிதவாழ்வை 50 அல்லது 100 பாகங்களாகப் பிரிக்கலாம்.

❀ கோர்ட் அனுபவமுள்ளவனுக்கு கேஸ் போகும் போக்குத் தெரியும். வக்கீல் கேஸ் ஜெயிக்காதுஎன்றாலும், அவன் அனுபவம் ஆத்மாவைத் தொட்டபின் அவனுக்குக் கேஸ் ஜெயிக்கும்என ஆத்மா உணர்த்தும். அவன் நம்பிக்கையை இழக்கமாட்டான். கேஸ் ஜெயித்தபின் வக்கீல், "எனக்கு நம்பிக்கையில்லை. எப்படி உனக்கு நம்பிக்கை ஏற்பட்டது? நீ நினைத்ததுபோல் ஜெயித்து விட்டதே"என்பார். பொதுவாக அவனுக்கு விளக்கம் சொல்லத் தெரியாது. ''ஏதோ மனதில் அப்படிப் பட்டது''என்பான். கவனித்தால் ஒவ்வொரு கட்டத்திலும் சொல் நெகட்டிவாகவும், செயல் பாஸிட்டிவாகவும் இருப்பது அவன் கண்ணில்படும். மனதில்படும். சாட்சி எதிரான செய்தியை வாய்தவறிச் சொன்னவுடன், வக்கீல் மனம் உடைந்துவிடுவார். ஜட்ஜ் திகைப்பார். சாட்சி மாற்றிச் சரியான செய்தி சொல்ல, ஜட்ஜ் எழுதுவதை இவன் கவனித்திருப்பான். அது அவனுக்கு

நம்பிக்கையூட்டும். அந்த நேரம் நடக்கும் செய்திகள் நல்ல சகுனமாகும்.

- ❀ காய் வதங்கியிருப்பதால் சாம்பார் கெட்டுவிடும்எனத் தெரிகிறது. ஆனால், வதங்கிய காயைக் கையால் எடுக்கும்பொழுது நல்ல உணர்வு ஏற்பட்டால், சாம்பார் கெடாதுஎனப் புரியும். நல்ல காய், நல்ல சாம்பார் தரும். காய் வதங்கியிருந்தால், வேறு பருப்பு, மிளகாய், அவற்றின் தரம், அன்று மிகமிகச் சிறப்பாக அமைந்தால், வதங்கிய காயும் ருசியான சாம்பார் தரும். ஆத்மா விழிப்பாக இருந்தால் வதங்கிய காய் வாராது. வந்தால் விழிப்பான ஆத்மா அதிலும் நல்ல சாம்பார் செய்யும். விழிப்பான ஆத்மாஎன்பதை நாம் இராசிஎனக் கூறுகிறோம்.
- ❀ நமக்கு ஆத்மவிழிப்பு அளவுகடந்துள்ள நேரம் நடக்கும் காரியங்களில் பிரேக் இல்லாத வண்டி, இங்க் இல்லாத பேனாவும் எழுதும், தவறில்லாமல் ஓடுகிறதுஎனக் காணலாம். ஆனால், ஆத்மவிழிப்புள்ளவர் வண்டியின் பிரேக்கை மிகவும் சரியாகவும், பேனாவில் இங்க்கை எப்பொழுதும் கவனமாகவும் பார்ப்பது ஆத்மாவுக்கு நம்முடைய கடமை.

நமது திறமைக்கேற்ப எது செய்தாலும், எந்த அளவில் செய்தாலும், பாங்க் சட்டங்களை ஒதுக்கிவிட்டு நமக்குப் போதுமான மூலதனத்தை முழுமையாகத் தர விரும்புகிறார்கள்:

- ✡ மனிதன் கடவுளை சச்சிதானந்தமாகக் கண்டான். சச்சிதானந்தம் கடவுளில்லை. கடவுள் தம்மை மனித முயற்சி, அறிவுக்கேற்ப வெளிப்படுத்துகிறார். கொள்ளிவாய்ப்பிசாசு, ஐயனார், மோகினி, கிராமதேவதை, அம்மன், ஆகியவற்றிலிருந்து சிவன், பிரம்மா, விஷ்ணுவரை கடவுளுண்டு. சச்சிதானந்தம் அவற்றைக் கடந்தது. பிரம்மம் அதையும் கடந்தது.



- ✡ வாழ்வு மனிதத்திறமையின் முழுமைக்கேற்ப தன் செல்வங்களை அபரிமிதமாக வெளிப்படுத்துகிறதுஎன்பது மேற்சொன்ன தத்துவத்தின் வாழ்க்கைப் பிரதி.
  - ❀ பொதுவான வாழ்வில் ஒருவர் ஆரோக்கியமாகவும், அடுத்தவர் நலிந்தும் இருக்கிறார்.
  - ❀ ஒருவர் உச்சியிலும், அடுத்தவர் தரைமட்டத்திலும் உள்ளார்.
  - ❀ வாழ்க்கை அனைவருக்கும் பொது; பெறுவது அவரவரைப்பொருத்தது.
  - ❀ அனைவரும் பிரம்மம்என்பதால், அந்த அளவில் சமம்என்பதால், எவர் பெறுவதும் அடுத்தவர் பெறுவதற்கு, அவரவர் நிலையைக் கருதினால் 'சமம்'எனக் கூறலாம். சிறிய, பெரிய பாத்திரங்களை நீரில் மூழ்கிஎடுத்தால் அனைத்தும் நிறைய இருக்கும். *நிறைவதில் அவை சமம்.*
- ✡ நாட்டில் சட்டங்கள் பல. பாங்க் பணம் தரும்பொழுது 1970க்கு முன்னால் working capital நடைமுறைச் செலவுக்கே தரும். 1970க்குப் பின்னால் முதலீட்டில் 25%, 50%, 75% கொடுத்தது. சிலருக்கு 100%உம் தந்தது. விவசாயிக்கு நிலம் வாங்குவதற்கும், வீட்டில் திருமணத்திற்கும்தவிர 1980க்குமுன் பாங்க் பலவிதமான கடன்களை வழங்கியது. 1980க்குப்பின்னால் திருமணக் கடன்களும் வழங்கப்பட்டன. வீடு வாங்கவும் கடன் வழங்கியது பாங்க். கடன் வழங்கும் சட்டம் நாட்டின் பொருளாதார நிலையைப் பொருத்தது. அதற்காக ஏற்பட்ட விதிஎன ஒன்றில்லை.
- ✡ நாணயமும், திறமையும் உள்ள அன்பர்கட்கு எல்லாச் சட்டங்களும் விலகி வழிவிடும். இலஞ்சம்முதல் கொடுமைவரை விலகாத சட்டமில்லை. அது பாங்க்கையும்கடந்தது. கொடுமையான மாமியார் கொடுமை செய்யவேண்டும்என்பதில்லை. திருட்டுக்குப் பேர்போனவர் திருடவேண்டும்என இல்லை. மகசூல் பெருக மழைவேண்டும் என்பதில்லை. வியாபாரம் மார்க்கட்டைப்பொருத்ததில்லை.

❀ எதுவும் எதையும் பொருத்ததில்லை.

❀ அனைத்தும் அன்னையைப்பொருத்தது.

❀ நாம் அன்னையை ஏற்பதைப்பொருத்தது.

❀ அன்னை நம்மை அரவணைப்பதைப்பொருத்தது.

❀ இங்கிலாந்து தனியாக ஐரோப்பிய நாடுகள் அனைத்தையும் தோற்கடித்தது ஸ்ரீ அரவிந்தர் சக்தியால்என்பதை நம்மால் நம்ப முடியுமானால், நீர்மேல் நடக்கலாம், நெருப்பில் குளிக்கலாம்.

❀ முடிவு மனிதனுடையது.

கணவர் - அப்படியானால் நம் கம்பனி இந்தியா முழுவதும் பரவிவிடும்;

பார்ட்னர் - அதற்குரிய தகுதி, நம் நாணயம் ஜீவன் முழுவதும் பரவவேண்டும்:

✡ நாணயம் ஜீவன் முழுவதும் பரவுவதுஎன்றால் என்ன? சொல், செயல், எண்ணம், உணர்ச்சி, ஆகியவற்றுள் நாணயம் வேண்டும்.

✡ சொல்லிலும், செயலிலும் நாணயம் எளிதாகப் புரியும். எண்ணத்திலும் விளங்கும். எண்ணத்தின் நாணயத்திற்கும், உணர்வின் நாணயத்திற்கும் உள்ள வித்தியாசம் புரியாது. மனம் கொடுக்கச் சொல்லும் பொழுது, கை அப்பொருளை அலமாரியில் வைத்துப் பூட்டும். கை வாராது. கை பிரியமாக வருவது உணர்ச்சியின் நாணயம்.

✡ ஜீவன் முழுவதும் பரவவேண்டியது சைத்தியப்புருஷன், நாணயம் மட்டுமன்று. நம் ஜீவன் நாட்டிற்கு ஆன்மீகப் பிரதிநிதியாகிறது.

✡ அன்பர்கள் உள்ள நாட்டில் வரும் மாறுதல்கள், அன்பர்கள் இல்லாத நாட்டில் வருவதில்லை. ஒரு நாட்டு லைப்ரரியில் *The Life Divine* இருந்தால் அதற்குரிய மாறுதல்கள் அந்த நாட்டில் காணலாம்.



✡ அன்னையிடம் வந்த வெளிநாட்டாரில், அமெரிக்கர் அதிகம். அவர்களில் பெரும்பாலோர் கலிபோர்னியாவிலிருந்து வந்தனர். ஜாக்கிரையாஎன்ற ஆசிரியர்,

❀ கலிபோர்னியா அமெரிக்காவிற்குத் தலைவன்;

❀ கலிபோர்னியா உலகத்தின் தலைவன்;

என எழுதுகிறார். வந்த அன்பர்கள் அன்னையை ஏற்றவர், அன்னைக் கோட்பாடுகளை ஏற்கவில்லை. ஆரம்பத்தில் ஏற்பட்ட மாறுதல்களுக்குப்பின் மாறுதல்களில்லை. ஜாக்கிரையா, "கடந்த 30 ஆண்டுகளாக கலிபோர்னியா மிகவும் தாழ்ந்து, மற்ற மாநிலங்களை விடவும் தாழ்ந்துவிட்டது"என்று எழுதுகிறார்.

✡ அமெரிக்கக் கல்லூரியில் ஒரு பாடபுத்தகத்தில் ஸ்ரீ அரவிந்தர் எழுதியதை மேற்கோள் காட்டும் இடம் வந்தவுடன்,

❀ மாணவர்கள் அமைதியானார்கள்;

❀ சூழல் கனத்தது;

என ஆசிரியர் கூறுகிறார்.

✡ அன்பர்கள் சேருமிடங்களைச் சுற்றியுள்ள கடைத்தெருவுகள் அபரிமிதமாக வளர்வதைக் காணலாம். அன்பர்கள் வாழும் இடத்தைக் கடந்து அன்பர்கள் இல்லாத இடத்திற்கு வந்தால், நஞ்சை வெளியினின்று, புஞ்சை வெளிக்கு வந்ததுபோல் தோன்றும்.

✡ நாணயம் வாழ்வுக்குத் தேவை;

சைத்தியப்புருஷன் யோகத்திற்குத் தேவை.

✡ அன்னை அறை, பகவான் அறை, சமாதியில் உள்ள சூழல், மாத்ரு மந்திரில் உள்ள சூழல், அன்பர் வீட்டிலிருப்பதைக் காணலாம். சம்பிரதாயமான அன்பர்கள் வீட்டில் படம் கறுத்துவிடும். மாடியில் கருமாதி செய்தால் கீழேயுள்ள படங்கள் கறுத்துவிடுகின்றன.

சம்பிரதாயம், ஈமச்சடங்கு, பொய், சோம்பேறித்தனம் ஆகியவை சூழலை விலக்கும். சத்தியம், சுத்தம் சூழலை விளக்கும்.

தாயார் தம் கனவிற்குரிய அர்த்தத்தை உணர்ந்தார். இதுவரை ஏற்பட்ட மாறுதல்கள் நல்லவை. ஆனால் போதுமானவையன்று. தம் சமர்ப்பணத்தை மேலும் தொடரமுடியாமல் தவிப்பதை உணர்ந்தார்:

- ✡ Accomplishment சாதனைஎன்பதை நாம் அறிந்தால், அது பல நிலைகளில் இருக்கிறது. அந்தந்த நிலையில் சாதனை முடியும். எளிதாக முடியாது, முழுமுயற்சிக்குப் பலன் தரும்எனத் தெரியும். ஒரு நிலை கீழேயுள்ளவனுக்கு மேல்நிலைச் சாதனை முழுமுயற்சிக்கே முடியாது. ஒரு நிலை மேலேயுள்ளவனுக்கு கீழ்நிலைச் சாதனை எளிதாக முடியும்.
  - ❀ பிரச்சினைஎன்பது நாம் உள்ள நிலையில் ஏற்படும் குறையால் எழுவது. குறையை நீக்கினால் உடன் பிரச்சினை விலகும். வாய்ப்பு நம்முடைய நிலையில் வந்தால் முழுமுயற்சிக்குப் பலன் தரும்.
  - ❀ அன்னை தரும் வாய்ப்புகள் அவர் நிலைக்குரியன. நாம் அவற்றால் பலன் பெறவேண்டுமானால், முதலில் நாம் நம்மை வாய்ப்பின் நிலைக்கு உயர்த்திக்கொள்ளவேண்டும். அன்னையை முழுமையாக ஏற்றால் அது உடனே முடியும். நம்மால் அன்னையை ஏற்கமுடிவதில்லை. நமக்கு நம் உற்றார், உறவினர், நட்பு, சமூகம், ஆகியவை முக்கியமாக இருக்கின்றன. அவர்கள் வாழும் பொய்யான வாழ்வு நமக்கு ருசிக்கின்றது. அன்னையின் மெய் அமிர்தம்என நம்மால் அறியமுடிவதில்லை.
  - ❀ தாயார் நாடெங்கும் கம்பனி பரவும்எனக் கனவில் கண்டார். அது சூட்சுமஉலகின் வாய்ப்பு. அதைப் பெற சமர்ப்பணம் சூட்சுமத்தில் நிறைவேறவேண்டும். தாயாருக்குத் தாம் மனைவிஎன்பது முக்கியம். அன்பருள் மனைவியுண்டு. அன்பராக அன்னைக்குக் கடமையை ஆற்றினால், மனைவியின் கடமை அதனுள் அடங்கும் என அவர் அறிந்தாலும், மனம் அடக்கமான மனைவியாக, அன்பான தாயாராக இருக்கப் பிரியப்படுகிறது. மனைவிஎன்ற பெண்ணின் அடக்கம் அறிவில்லாத பரம்பரை மூடநம்பிக்கைக்கு உள்ள பயத்தின் பணிவுஎனத் தாயார் அறியமாட்டார். பாசமான தாயார்என்பது நாய் தன் குட்டிகளை அணைப்பதுபோன்ற விலங்குணர்வுஎன அவருக்குத் தெரியாது. அவருடைய ஜீவியம் நம்மைப்போல் விலங்குஜீவியம். இந்த அறியாமையுள்ளவரை அவருக்குக் கதிமோட்சமில்லை.
  - ❀ ஜீவியம் உயராமல் சமர்ப்பணம் செய்ய முனைவது ஏணி இல்லாமல் கோவில் மதில்சுவர்மீது ஏற முயல்வது போலாகும்.
  - ❀ எல்லாம் தெரிந்து எதுவும் முடியவில்லைஎன்பவர், உயர்ந்ததை தாழ்ந்ததில் பூர்த்திசெய்ய முனைவதுபோலாகும். எலக்ட்ரிசிட்டியும், குடிநீர் வசதியும், பள்ளிக்கூடமும் இல்லாத ஊரில் பெரிய பங்களா கட்டி நகர்ப்புற வசதிகளை அங்குக் கொண்டுவர முனைபவருக்கு என்ன வெற்றி கிடைக்குமோ அதே வெற்றியே தாழ்ந்த ஜீவியத்தில் உயர்ந்த ஜீவியத்தின் வசதிகளைப் பூர்த்திசெய்பவருக்குக் கிடைக்கும்.
  - ❀ பெரியவன் புதுடிரஸ் கேட்பது தகப்பனாருக்குச் சரிஎனப்படுகிறது. தாயாருக்குச் சரிஎனப்படாவிட்டாலும், பையன் ஆசை பூர்த்தி ஆகவேண்டும்என மனம் நினைக்கிறது. அவன் ஆசைக்குத் தொடர்பான தம்ஆசை எதுஎனக்கண்டு, அதைக் களைய முன்வர வேண்டும்என்ற அறிவிருந்தாலும், முயற்சியில்லை.

முயற்சியில்லாத அறிவிற்கு முழுமையில்லை.

❀ அதற்கு இரு காரணங்கள் உள. ஒன்று தாம் மனைவி, தாயார் என்ற எல்லைக்குள் செயல்படவேண்டும்என்ற இந்தியப் பெண்ணின் அடக்கம். இரண்டாவது தாம் உயர்ந்து, உயர்ந்ததைக் கீழே கொண்டுவருவதற்குப்பதிலாக, தாம் உள்ள நிலையிலிருந்து கொண்டு, உயர மறுத்து உயர்வைக் கீழே கொண்டுவர முயல்வது.

❀ தாயார் நிலை, இன்று நாம் பலரையும் காணும்பொழுது மிக உயர்ந்த நிலை. அது அவருக்கு வந்துள்ள வாய்ப்புக்குப் போதாது.

பெண் - மதர் விஷயம் எப்படிப் போனாலும் நல்லதாக முடியும் போலிருக்கிறதே:

✡ நடப்பவை எல்லாம் நல்லனஎன்ற நோக்கத்தில் தவற்றுக்கு வழியில்லை. குரு நல்லதையே சொல்வார்என்பதற்கும், குரு சொல்வன எல்லாம் நல்லனவாகவே இருக்கும்என்பதற்கும் வித்தியாசம் உண்டு.

❀ என் பொருளைப் பிறர் அனுபவிப்பதே எனக்கு அதிக சந்தோஷம் தரும்என்ற மனநிலையுள்ள இடத்தில் திருடுஎன்பதற்கு அர்த்தமில்லை.

❀ அன்னைஜீவியம் அப்படிப்பட்டதுஎன அறிவது அன்னையைப் பூரணமாக அறிவது.

❀ இக்கருத்தின்பின் உள்ள தத்துவம் அனந்தம்.

நாமறிவது ஒரு கூடையில் உள்ள பழங்களில் சில எடுத்தால், கூடையில் உள்ள பழங்கள் குறையும். 4 பழங்கள் கூடையில் போட்டால் கூடையில் பழங்கள் அதிகமாக இருக்கும். அனந்தம் என்பது infinity முடிவற்றது.

☆ அனந்தத்திலிருந்து அனந்தத்தை எடுத்தால் மீதி பூஜ்யம்என நாம் நினைப்போம்.



☆ அனந்தத்திலிருந்து அனந்தத்தை எடுத்தால் மீதியிருப்பது அனந்தம்என கணிதமும், உபநிஷதமும் கூறுகின்றன.

☆ அனந்தத்தில் அனந்தத்தைச் சேர்ந்தால் அனந்தம் இருமடங்காகும்என நாம் நினைக்கும்பொழுது கணிதம் அனந்தம்எனக் கூறுகிறது.

அனந்தம் + அனந்தம் = அனந்தம்

அனந்தம் − அனந்தம் = அனந்தம்

அனந்தம் X 5 = அனந்தம்

அனந்தம் ÷ 10 = அனந்தம்

அனந்தம் X அனந்தம் = அனந்தம்

எதை அனந்தத்திலிருந்து எடுத்தாலும், எதை அனந்தத்துடன் சேர்த்தாலும், அனந்தத்தை எதனால் பெருக்கினாலும், அனந்தத்தை எதனால் வகுத்தாலும் முடிவு அனந்தம்என கணிதமும், உபநிஷதமும் கூறுவதை நாம் கவனிக்க வேண்டும். "அது - அனந்தம் - நகராது. ஆனால் நாம் எவ்வளவு தூரம் போனாலும் முன்னேயிருக்கும்"என கீதை கூறுகிறது.

☆ கணிதத்தில் கூறும் உண்மையை நாம் வாழ்விலும், ஜடத்திலும் ஏற்றுக்கொண்டால் அன்னை நமக்கு யதார்த்தமாக விளங்கும். நமக்கு நஷ்டமில்லை, இலாபமில்லை, உயர்வில்லை, தாழ்வு இல்லை, பிறப்பில்லை, மரணமில்லை, நோயில்லை, இன்பம் இல்லை, துன்பமில்லை என்பது ஆத்மாவில் உள்ள உண்மை. ஆத்மா வாழ்விலும், உடலிலும் வெளிப்பட்டால் இந்த உண்மை புரியும். போன வேலை திரும்ப வந்ததுஎன்ற செய்தி இக்குடும்பத்தை நடைமுறையில் மேற்கூறிய தத்துவத்தைக் கருதும்படிச் செய்திருக்கிறதுஎன்பது கவனிக்கவேண்டியது.

தாயார் - இன்றையச் சூழலில் அன்னை அன்று உயிருடனிருந்தது போல் செயல்படுகிறார்:

✡ அன்னை அன்று - 1973க்குமுன் - ஆசிரமத்தில் வாழ்ந்தபொழுது அவரிடம் நேரே போய் ஆசீர்வாதம் பெற்றவர் தங்கள் பிரச்சினைகள் தீர்வதைக் கண்டனர். காலை 10 மணிக்கு "எனக்கு வேலை போய் விட்டது"எனக் கூறி அனுப்பிய அன்பர் மாலை 6 மணிக்குமுன் அவ்வேலையைத் திரும்பிப்பெற்றார். அன்று அன்னையிருந்தார்கள்; அவர் சக்தி வேகமாகச் செயல்பட்டது. இன்று நாம் செய்யும் பிரார்த்தனை சூட்சுமமாக அவருக்குக் கேட்டு அவர் அனுக்கிரஹம் செய்ய சில நாட்களாவது நியாயம்என நாம் நினைக்கிறோம். இக்கதையில் செய்தி அன்பர் வாழும் இடத்திற்கு வந்தவுடனே, வேலையை இழந்தவர் பிரார்த்தனை செய்யாமல், கேட்காமல் அடுத்த செய்தி வருவதற்குள் அவருக்கு வேலை கிடைத்துவிட்டது. 1970இல் சென்னைக்குப் பாண்டியிலிருந்து trunk call போட்டால் ½ மணி அல்லது 3 மணி நேரத்தில் கிடைக்கும். நாம் கூப்பிட்டவர் வீட்டிலில்லாவிட்டால் அவர் வரும்வரை காத்திருக்கவேண்டும். இன்று cell phoneஇல் அவர் எங்கிருந்தாலும் உடனே கிடைப்பது டெக்னாலஜியின் முன்னேற்றத்தால்.

✡ அன்னை பூதவுடலிலில்லாவிட்டாலும், சூட்சுமஉடலில் உலகில் இருந்து அன்றைக்குச் செயல்பட்டதைவிட அதிவேகமாகச் செயல் படுகிறார்.

- ❀ இதனுள் உள்ள தத்துவத்தின் ஓர் அம்சம்,
- ❀ அன்னை செயல்படுவது அன்பரின் பக்தியைப்பொருத்தது.
- ❀ அடுத்த அம்சமும் உண்டு.
- ❀ மனிதனை இறைவனாக்க வந்த அன்னை மனிதன் ஒத்துழைப்பை நாடினார். ஒத்துழைப்பு கிடைக்கவில்லை. கடுமையான எதிர்ப்பு எழுந்து துரோகமானதால் பகவான் உலகைவிட்டுப் போனார்.



- ❀ மனிதனிடம் நீங்கள் எதை எதிர்பார்க்கிறீர்கள்என அன்னையைக் கேட்டபொழுது "எதையும் எதிர்பார்க்கவில்லை"என்றார்.
- ❀ இன்று அன்னை அதிகமாகச் செயல்படுவதை அன்னை மனித ஒத்துழைப்பில்லாமல் சாதித்ததுஎனவும் கூறலாம்.
- ❀ நாட்டில் பிளேக் வந்தபொழுது தடுப்புஊசிக்கு எதிர்ப்பிருந்தது. சர்க்கார் வலியுறுத்தவில்லை. பெரியம்மைக்குத் தடுப்புஊசி வந்த பொழுது அதே எதிர்ப்பு எழுந்தது. எதிர்ப்பை மீறி ஊசி போட்டனர். இன்று பெரியம்மை ஒழிந்துவிட்டது.
- ❀ அன்னை நம் ஒத்துழைப்புடன் செயல்படுவார். ஒத்துழைப்பு இல்லாமலும் செயல்படுவார். எதிர்ப்பை மீறியும் செயல்படுவார். அவர் முடிவுசெய்தால், அன்னை செயல்படுவது *அனந்தம் வாழ்வில் வெளிப்படுவதாகும்*.
- ❀ அன்பர்கள் அனுபவத்தில் நாம் ஒத்துழைப்புடனும், இல்லாமலும், எதிர்ப்பை மீறியும் பிறருக்குப் பலிப்பதைக் காண்கிறோம். அதுவும் நடக்கும். அதை நாம் அறிந்துகொள்ளலாம், நடைமுறைப்படுத்த முயலாதிருப்பது நல்லது.

தாயார் - சுதந்திரத்தால் இந்த 8 பிள்ளைகள் மாறியது உண்மை... .....அடுத்த முறை வேறொரு பையன் அதையே செய்ய முயன்றான். வகுப்பு முழுவதும் தடுத்தது. இவனே தலைமையாக நின்றான்; .....

தாயார் - கண்டிப்பதில்லை. புத்திமதி சொல்வார்கள். சொந்தமாகக் குழந்தைகளை முடிவெடுக்கச் சொல்வார்கள்:

✡ பிள்ளைகட்குச் சுதந்திரம் தருவது, சைக்கிள் டயரை ஆணியால் குத்திய பையன் அதை ஒத்துக்கொண்டதால் அவனுக்குத் தண்டனை தாராமல் ஆரஞ்சுப்பழம் கொடுப்பது, 'இதுபோல் சண்டியை நான் பார்த்ததில்லை'என்ற பிள்ளை 2 ஆண்டுகளில் திருந்தியபின் "நீ

**மும்பாய் போய் உன் தாத்தாவைப் பார்க்கவேண்டுமா, வேண்டாமா என்ற முடிவை நீயே எடுத்துக்கொள்''என்பவை மேற்கூறிய நிகழ்ச்சிகளில் பெரும்பலன், முழுப்பலன் தந்தன. இந்த முறைகளைப் பெற்றோர் பயன்படுத்தாதற்குக் காரணம்,**

**அதற்குத் தேவையான பொறுமை பெற்றோருக்கு இருப்பதில்லை.**

**ஒரு குழந்தை சாப்பிடமாட்டேன்என்றால், புத்தகத்தைக் கலைத்துப் போட்டு வேடிக்கைப் பார்த்தால், மிரட்டினால் அது மீண்டும் செய்யாது. மிரட்டாமல் குழந்தைக்குப் பொறுமையாக சாப்பாடு ஊட்டுவதோ, அது கலைத்துப்போட்ட புத்தகங்களை தினமும் அடுக்கிவைக்கவோ அளவுகடந்த பொறுமைவேண்டும். அப்பொறுமையிருந்தால் குழந்தை நிரந்தரமாகத் திருந்தும். கண்டித்தால், வேறொரு விஷயத்தில் கிறுக்கு செய்யும். எங்கும் கண்டித்தால் பெரியவனானபின் பெரிய கிறுக்காகும். எவ்வளவு பொறுமை வேண்டும்என்று தெரிய வேண்டுமானால், எல்லா விஷயங்களிலும் குழந்தைக்குச் சுதந்திரம் கொடுத்துப்பார்த்தால் ஒரே நாளில் இது முடியாத காரியம்என முடிவுக்கு வருவோம். தலையைப் பிய்த்துக்கொள்ள வேண்டியிருக்கும். சமையல் செய்யமுடியாது, குளிக்க, வேறு வேலை செய்ய முடியாது, வீடு அலங்கோலமாக இருக்கும்.**

- ❀ **குழந்தையை வளர்ப்பது மிகச்சிரமம்.**
- ❀ **சுதந்திரமாக வளர்ப்பது நடக்காத காரியம்.**
- ❀ **முயன்றால் அதுவும் முடியும்.**
- ❀ **குழந்தை அழகாக வளரும், அற்புதமாக வளரும்.**
- ❀ **குழந்தைக்கு உண்மையான சுதந்திரம் தரும்பொழுது நமக்கு வாழ்வில் சுதந்திரம்என்றால் என்னஎன்று புரியும்.**
- ❀ **நாமாகக் கற்றுக்கொள்ளும்வரை ஆண்டவன் எவ்வளவு பொறுமையாக இருக்கிறான், நாம் எவ்வளவு சுதந்திரமாக வாழ்கிறோம்எனவும் புரியும்.**



- ❀ **சுதந்திரமான கட்டுப்பாடே உண்மையான கட்டுப்பாடுஎன்பது நிதர்சனமாகப் புரியும்.**

*தொடரும்.....*

❀❀❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

புறநிகழ்ச்சிகளை அகவுணர்வாக மாற்ற, நாம் அவற்றைக் கடக்கவேண்டும். அறிவு, பற்றறுத்தல், திரும்பத் திரும்பச் செய்வது அவற்றைக் கடக்க உதவும்.

***புறநிகழ்ச்சிகள் தீண்டாமலிருக்க அகவுணர்வைக் கடக்கவேண்டும்.***

## ஸ்ரீ அரவிந்த சுடர்

*பற்று விடல்:* பிரச்சினையைப் பொருட்படுத்தாமல், அதிலுள்ள சிரமத்தைப் பொறுத்துக்கொண்டால், (equality) சமத்துவம் ஏற்பட உதவும். பற்றை விட முயல்பவர் ஆரம்பத்தில் பற்றை விலக்கிப் பொருட்படுத்தாமலிருக்க முயலவேண்டும். அதனால் பற்று அறுபட்டால், யார்மீது நமக்குப் பற்றுள்ளதோ, அவர் தம் மனநிலையை மாற்றிக்கொள்வதால், சமத்துவம் ஏற்பட்டு நிலைக்க உதவும்.

***பொறுமை நிதானம் தரும்.***

***பற்றறுத்தால் நிதானம் நிரந்தரமாகும்.***

# லைப் டிவைன்

கர்மயோகி

## XIV. The Supermind as Creator

Page No.122
Para No.1

The Self-possession of the One is above.
This flux of the Many is below.
There is an intermediary state of being.
It is a power.
It is the creatrix of the worlds.
It is superior to Mind.
It is a principle of Will and Knowledge.
Both are active.
This principle is not entirely alien to us.
There is a Being.
That Being is entirely other than ourselves.
This principle does not belong to that Being.
Nor is it incommunicable.
It is not a state that mysteriously has given birth to us.
Nor does it reject our return to it.
There are heights far above us.
It seems to be seated there.
They are heights of our own being.
We can reach there.



## 14. சத்தியஜீவியம் – சிருஷ்டிகர்த்தா

ஏகன் அனைத்தையும் தன்னுட்கொண்டவன்.
நாம் வாழும் உலகம் அநேகன்.
இடைப்பட்ட நிலையுண்டு.
அது சக்தி.
அதுவே உலகை சிருஷ்டித்தது.
அது மனத்தைவிட உயர்ந்தது.
அது ஞானமும், உறுதியும் செயல்படும் சட்டம்.
இரண்டும் செயல்பட்டுக்கொண்டேயிருக்கின்றன.
இது நாமறியாததில்லை.
ஒரு ஜீவன் உண்டு.
அது நம்மிலிருந்து வேறுபட்டது.
இந்தச் சட்டம் ஜீவனுக்குரியதன்று.
அது நாமறிய முடியாததில்லை.
ஏதோ புதிராக அது உலகை சிருஷ்டிக்கவில்லை.
நாம் அதை நாடினால் அது நம்மை விலக்காது.
நமக்கு மேலே உயர்ந்த நிலையுண்டு.
அது அங்கு உட்கார்ந்துள்ளது.
அவை நம் ஜீவனின் சிகரங்கள்.
நாம் அதையடையலாம்.

We can infer that Truth.
We can glimpse it.
We can realise that Truth.
These are the greatest superhuman experiences.
We can live there for days on end.
They may be hours or days.
They are unforgettable moments.
They are our summits of being.
We can go there in two ways.
One is progressive expansion.
The other is sudden and luminous.
It is self-transcendance.
We descend next.
The doors shut.
They are doors of communication.
We can reopen them.
We can also keep them open always.
Our supreme ideal can be two.
One is self-annulment.
The other is self-fulfilment.
Self-fulfilment is self-perfection.
It is the highest summit of created being.
The other is the highest summit of the creative being.
Thus our human consciousness evolves.
This is the last summit.
Thus we can dwell permanently there.
We have seen this now.
This is the original Idea.
It is the final harmony.
We gradually express ourselves in the world.



சத்தியம் எதுஎன ஊகிக்கலாம்.
அது நமக்குப் பொறியாகத் தட்டுப்படும்.
நாம் சத்தியத்தை சித்தியாகப் பெறலாம்.
மனிதநிலையைக்கடந்த உயர்ந்த அனுபவங்கள் அவை.
அங்கு நாம் நாள்கணக்காக வாழலாம்.
அது மணிக்கணக்காகவுமிருக்கும்.
அவை மறக்கமுடியாத நேரம்.
அவை நம் ஜீவனின் சிகரம்.
இருவகைகளாக நாம் அதையடையலாம்.
கொஞ்சம் கொஞ்சமாக நாம் நம்மை விரிவுபடுத்தலாம்.
அடுத்தது திடீரென்று ஜோதி காட்சியளிப்பது.
நம்மை நாம் கடந்து செல்லும் நேரம் அது.
மீண்டும் நாம் நம் நிலைக்கு வருகிறோம்.
கதவு மூடிக்கொள்ளும்.
அவை நம்மை அத்துடன் இணைப்பவை.
நாம் மீண்டும் அதைத் திறக்கலாம்.
எப்பொழுதும் அதைத் திறந்துவைக்கலாம்.
நம் உயர்ந்த இலட்சியங்கள் இரண்டு.
ஒன்று ஜீவன் மோட்சத்தில் கரைவது.
அடுத்தது நாம் பூரணம் பெறுவது.
முழுமையடைவது பூரணம் பெறுவது.
சிருஷ்டிக்கப்பட்ட மனிதனின் சிகரம் அது.
மற்றது சிருஷ்டிகர்த்தாவின் உச்சி, உச்சியில் ஒரு சிகரம்.
அதுவே நமது பரிணாமம்.
இதுவே கடைசி மலையுச்சி.
அவ்விதம் நாம் அங்கு நிரந்தரமாகக் குடியேறலாம்.
இதை நாம் இப்பொழுது கண்டோம்.
இதுவே ஆரம்ப எண்ணம்.
இதுவே முடிவான சுமுகம்.
நாம் கொஞ்சம் கொஞ்சமாக உலகில் வெளிப்படுகிறோம்.

We mean to achieve it.

We need to elevate our human knowledge. Page No.122
Our action too must be raised. Para No.2
For that we need to know its divine workings.
Our human intellect needs to know how.
Can we communicate that to the intellect?
Will that help organise the divine workings?
What account can we give to the intellect?
Is it possible?
Is it ever possible?
We doubt that possibility.
This divine faculty has a human working.
But it is rare.
It is also dubious.
It is not easily verifiable.
It is separate from ordinary humanity.
It is remote from verifiable knowledge.
Human experience is separate from this.
But the doubt does not arise from these aspects.
The divine Supermind and human mentality are opposites.
This contradiction is apparant.
It is so in essence.
Even in operation it is like that.
Therefore our doubts arise.

*Contd...*

❀❀❀



இதை நாம் அடைவது நம் குறிக்கோள்.

மனித அறிவு உயரவேண்டும்.
நம் செயலும் உயர்த்தப்படவேண்டும்.
அதற்கு, தெய்வம் செயல்படும் வகையை நாம் அறியவேண்டும்.
அது மனித அறிவுக்குப் புலப்படவேண்டும்.
நாம் அதை மனத்திற்குக் கூறமுடியுமா?
தெய்வச்செயலைத் திறம்படச் செய்ய அது உதவுமா?
அறிவிடம் நாம் என்ன கூறலாம்?
அது முடியுமா?
எப்பொழுதாவது அது முடியுமா?
நமக்கு ஐயம் எழுகிறது.
தெய்வச்செயல் மனிதச்செயலில் வெளிப்படுகிறது.
அது அபூர்வம்.
அது நிலையற்றது.
அதைச் சுலபமாக நிரூபிக்கமுடியாது.
அது மனிதவாழ்விலிருந்து பிரிந்துள்ளது.
நிரூபணத்திலிருந்து விலகிநிற்கிறது.
மனிதஅனுபவம் இதனின்று வேறுபட்டது.
இவற்றாலெல்லாம் சந்தேகம் எழவில்லை.
சத்தியஜீவியமும், அறிவும் எதிரானவை.
முரண்பாடு வெளிப்படை.
அடிப்படையில் அந்த முரண்பாடுள்ளது.
நடைமுறையிலும் அது உண்டு.
அதனால் எழுவது சந்தேகம்.

*தொடரும்...*

❀❀❀

**Death is not to be conquered; life and death should progress.**

**மரணத்தை வெல்லவேண்டும்என்பதன்று;**
**வாழ்வும், மரணமும் முன்னேறவேண்டும்.**

- ✡ துஷ்ட நிக்ரஹம், சிஷ்ய பரிபாலனம் - துஷ்டனை அழிப்பதும், சிஷ்யனை பரிபாலிப்பதும் ஆண்டவனுடைய தர்மம்.
- ✡ ஒரு கோழி திருடியவனை அங்கேயே தூக்கில் போட்ட காலம் உண்டு.
- ✡ கொலை செய்தவனுக்கும் தூக்குத்தண்டனை தரக்கூடாதுஎன்பது இக்காலம்.
- ✡ திருடியவனைத் திருத்தவேண்டும்என்பது இன்றைய தர்மம்.
- ✡ அதையே முடிவாகக் கருதினால் மரணத்தை அழிப்பதற்குப்பதிலாக, மரணமும் முன்னேறவேண்டும்என்பது Agenda.
- ✡ மரணம் முன்னேறுவதுஎன்றால் என்ன?
- ✡ அதுவே திருவுருமாற்றம்.
- ✡ எதிரியிடம் ஜாக்கிரதையாக இருக்கலாம். எந்த நேரமும் அது ஆபத்து. எதிரியை நம் கட்சியில் சேர்த்துக்கொண்டால், இனி அவர் எதிரியாக இருக்கமுடியாது. நாளடைவில் அவர் நம்மைப்போலாவார். அப்படி அவர் மாறிய காலத்து நம்மைவிட நம் கட்சிக் கொள்கையில் அவர் தீவிரமாக இருப்பார்.

  நாத்திகன் ஆஸ்திகனாக மாறும்பொழுது அது தீவிரமாக இருப்பதுண்டு.
- ✡ தாழ்த்தப்பட்டவருக்குப் படிப்பில்லைஎன்றபொழுது நாட்டில் எத்தனை விஞ்ஞானிகள், இன்ஜினீயர், டாக்டர் இருந்தனர்? தாழ்த்தப்பட்டவருக்குப் படிப்புண்டுஎன்றபொழுது உலகில் அதிகபட்ச இன்ஜினீயர்களை நாடு உற்பத்தி செய்கிறது.



- ✡ மரணம் நம் முன் வேண்டாதது, நாட்டில் தாழ்த்தப்பட்டவரைப்போல. மரணத்தை தவத்தால் வெல்ல முயன்றனர். ஆத்மாஅளவில் வெற்றி பெற்றனர். உடல் அளவில் பெறும் வெற்றிக்குக் காயகல்பம்எனப் பெயர். அது முடியவில்லை. மரணத்தின் சுவடு நோய், மூப்பு. நோய் அழிவதைக் காண்கிறோம். மூப்பும் தளர்கிறது. அவை சவரட்சணைக்கும், மருந்துக்கும் தலைகுனிகின்றன. மரணம் மனவளர்ச்சிக்கும், ஆத்ம விழிப்புக்கும் பணியும். அது ஸ்ரீ அரவிந்தம்.
- ✡ ஆத்மா வேகமாக வளர்ந்தால் உடல் அதற்குப் பயனற்றுப்போகிறது. எனவே, அடுத்த பிறப்பில் வேறோர் உடலை நாடுகிறது. உடலின் ஆன்மா விழித்தால், அது ஆன்மா வளரும் வேகத்தில் வளரும். அப்பொழுது ஆன்மா அடுத்த உடலைத் தேடும் அவசியமிருக்காது. மரணம் வெல்லப்படும்.
  - ❀ மரணத்தை வெல்வதுஎனில் உடலில் ஆன்மவிழிப்பேற்பட்டு, ஆன்மாவின் தேவையைப் பூர்த்திசெய்வதாகும்.
  - ❀ உடலில் செல்கள் தேய்ந்து அழிகின்றன. உடலின் ஆன்மா விழித்தால், செல்கள் தேய்மானமிருக்காது. அவை அழியா.
  - ❀ அதுவே மரணம் வெல்லப்பட்டதாகும்.

❀❀❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

முன்னேற்றப் பாதையில் ஒரு மனிதன் ஒரு நிலையிலிருந்து அடுத்த நிலைக்குத் தொடர்ந்து போகிறான். கடைசி நேரத்தில் ஒரு நிகழ்ச்சியோ, குணமோ, பழக்கமோ அவனை முந்தைய நிலைக்குக் கொண்டுபோய் அங்கேயே நிலைநிறுத்த முயலும். தனக்கு எது பெரிய தடையோ அதையே இலட்சியமாகக் கருதும் மனப்பான்மையும் மனிதனுக்குண்டு.

***மனிதன் தடையை இலட்சியமாகப் போற்றுவான்.***

# யோக வாழ்க்கை விளக்கம் V

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

**863) அகந்தையைச் சரணம் செய்வது பெரிதன்று. அகந்தை தானே தன்னைச் சரணம் செய்ய முன்வருவது பெரியது.**

*அகந்தை தானே தன்னைச் சரணம் செய்வது பெரியது.*

- ✡ எதுவும் உலகில் உயிரோடிருக்க அதனுள் ஜீவனிருக்கவேண்டும்.
- ✡ அந்த ஜீவனை ஆத்மாஎனவும், பிரம்மம்எனவும் கூறுகிறோம்.
- ✡ காதல் திருமணத்தில் பெண்ணும், பிள்ளையும் ஒத்துப்போவார்கள்.
- ✡ பெற்றோர் ஒத்துப்போக மாட்டார்கள்.
- ✡ பெற்றோர் ஒத்துப்போனால் தடை சுமுகமாக மாறும்.
- ✡ பெற்றோர் பிள்ளைகட்கு வித்து.
- ✡ கட்டுப்பாட்டை உறுப்பினர் அதிகாரத்திற்குப் பணிந்து ஏற்கலாம், ஏற்க மறுக்கலாம்.
- ✡ ஏற்பது சிறப்பு.
- ✡ கட்டுப்பாட்டின் சிறப்பை உணர்ந்து, வரவேற்று ஏற்பது அதனினும் சிறப்பு.
- ✡ இந்து-முஸ்லீம் கலவரத்தைப் போலீஸ் அடக்குகிறது.
- ✡ அவர்கள் நட்பால் இணைந்து கலவரம் அடங்குவது பெரியது.
- ✡ அகந்தைஎன்பது சிருஷ்டிஎன்ற முழுமையினின்று பிரிந்த கண்டம்.
- ✡ அது மனத்தால் சிந்திக்கின்றது.
- ✡ தான் வேறு, வேறாக இருப்பது நல்லதுஎன அறிகிறது.
- ✡ அகந்தை காலத்தால் செயல்படுகிறது.
- ✡ கடந்ததைக் கருதி, வருவதை எதிர்பார்த்து, நிகழ்வதை நிர்ணயிக்-கின்றது.
- ✡ தான் சிறியதாக இருப்பது பாதுகாப்புஎன நம்புகிறது.
- ✡ காலம், மனம், கண்டம், சுயநலம் சேர்ந்து அகந்தையை மேல் மனத்திலிருத்துகிறது.



- ✡ மேல்மனத்தின் கீழுள்ள உள்மனத்தில் புருஷனிருக்கிறான்.
- ✡ அப்புருஷனே அகந்தையின் ஜீவன்.
- ✡ அவன் கடந்தகாலத்திலோ, வருங்காலத்திலோயில்லை; நிகழ் காலத்திலிருக்கிறான்.
- ✡ புருஷன் மௌனத்திலாழ்ந்தவன்.
- ✡ அகந்தைக்குரிய சிறுமைகள் அவனுடைய ஜீவனுக்கில்லை.
- ✡ அகந்தையின் ஜீவன் அகந்தையை ஆதரிப்பதால் அகந்தையிருக்கிறது.
- ✡ ஜீவன் நகர்ந்தாலும், ஆதரிக்க மறுத்தாலும் அகந்தையில்லை.
- ✡ அகந்தை செய்யும் சரணம் பூரணமானதன்று.
- ✡ அகந்தையின் ஜீவனுடைய சரணம் பூரணமானது.
- ✡ நாம் அகந்தையாக இருந்து சரணம் செய்வதைவிட,
- ✡ அகந்தையின் ஜீவனாகச் சரணம் செய்தால் சரணம் பூர்த்தியாகும்.

மூலம் பெரியது. முழுப்பலன் தரவல்லது.

அகந்தை அழிய அதன் மூலமான ஜீவனே கரு.

❀❀❀

**864) மேல்மனவாழ்வு, உள்மனத்திற்குட்பட்டு, சமர்ப்பணம் செய்வது அந்த வகையில் பரிணாமம். ஜீவன், பரமாத்மாவை அழைத்து அதனுடன் இரண்டறக்கலப்பது அழைப்பு. அந்த வகையில் அது ஆன்மீகப் பரிணாமவளர்ச்சி.**

*ஜீவன் பரமாத்மாவை அழைத்து, அதனுடன் இரண்டறக்கலப்பது அழைப்பு.*

- ✡ வாழ்வில் நாகரீகம்என்பதும், ஆன்மாவில் பரிணாமம்என்பதும் ஒன்றுபோன்றவை.
- ✡ பெரியது சிறியதை அடக்குவது முன்னேற்றம்.
- ✡ சிறியது தானே முன்வந்து பெரியதை ஏற்பது பரிணாமம்.
- ✡ மேல்மனம் சிறியது, உள்மனம் பெரியது.
- ✡ மேல்மனத்திலிருந்து தியானத்தால் உள்மனத்திற்குப் போகலாம்.
- ✡ அது பரிணாமமாகாது.
- ✡ சமர்ப்பணத்தால் உள்மனம் போவது பரிணாமம்.

- ✡ **ஜீவன் தேடுவது மோட்சம்.**
- ✡ **அது பரிணாமத்தைத் தேடுவதில்லை.**
- ✡ **அது பரமாத்மாவைத் தேடுவதில்லை.**
- ✡ **பரமாத்மாவுடன் இரண்டறக்கலப்பது மோட்சம், பரிணாமமில்லை.**
- ✡ **அதையே சமர்ப்பணத்தால் செய்வது பரிணாமம்.**
- ✡ **அதற்காகப் பரமாத்மாவைக் கூப்பிடுவது அழைப்பு.**
- ✡ **கல்லூரிக்குப்போய் பட்டம்பெறுவது அனைவரும் செய்வது.**
- ✡ **அறிவுபெறக் கல்லூரிக்குப்போவது குறைவு.**
- ✡ **கல்லூரிக்குப்போனால், பட்டம் எடுக்க முயன்றால், அறிவு பெறுவது தடைப்படும்.**
- ✡ **அறிவு ஆயிரம்வகைகளில் பெறவேண்டியது.**
- ✡ **பட்டம் அவற்றுள் ஒரு பாதை.**
- ✡ **ஒரு பாதைக்குள் நம்மை இருத்திக்கொண்டால் மற்ற பாதைகள் பலன் தாரா.**
- ✡ **அறிவு பெறும் சூழல் கல்லூரியிலோ, பல்கலைக்கழகத்திலோ இல்லை. அதற்கெதிரான சூழலிலில்லை. நடைமுறையில் கல்லூரி அறிவுக்குத் தடையாக அமைகிறது.**
- ✡ **உலகமே பல்கலைக்கழகமானால், மனிதன் ஞானம் பெறலாம்.**
- ✡ **மோட்சம் பட்டம்பெறுவதைப்போல்.**
- ✡ **ஞானம் பரிணாமம்போல.**
- ✡ **மேல்மனம் மோட்சத்திற்குரியது.**
- ✡ **உள்மனம் இரண்டிற்கும் உரியது.**
- ✡ **தியானம், சமர்ப்பணம்என்ற பாதைகள் நாம் உள்மனத்திலிருந்து எதைப் பெறலாம்என்பதை நிர்ணயிக்கும்.**
- ✡ **அழைப்பு ஆத்மா வாழ்வில் பிரம்மமாக மலர்வதைப் பூர்த்திசெய்யும்.**

*தொடரும்.....*

❀❀❀

**ஜீவிய மணி**

**புரட்சி எழுவது புனித எழுச்சியால்.**



## அன்பர் கடிதம்

இரண்டு வருடங்களுக்குமுன்பு ஸ்ரீ அன்னையைப்பற்றி அறிந்திருந்த சமயம். தைப்பொங்கலுக்குமுன்னர் இரண்டு பெண்களை உடன் வைத்து வீட்டைச் சுத்தம்செய்துகொண்டுஇருந்தேன். காலை பதினொரு மணி அளவில் என் பெண்குழந்தை, 4 வயதிருக்கும், பக்கத்தில் உள்ள குருக்கள் இல்லத்தில் விளையாடிக்கொண்டிருந்தவள், அழுதுகொண்டே வந்தாள், நாய் கடித்துவிட்டதுஎன்று. பதறிப்போய் பார்த்தால் முகமெல்லாம் கீறல், வீங்கிப்போய்இருந்தது. நான் உடனே கைப்பையை எடுத்து T.V.S.50இல் மாட்டி, எனது குழந்தையையும் முன்னால் உட்கார வைத்து, டாக்டரிடம் அழைத்துச்சென்றேன். செல்லும் வழியில் பை விழுந்துவிட்டதை கவனிக்கவில்லை. டாக்டரிடம் போய் நின்றபோது பார்த்தால், கைப்பையைக் காணவில்லை. என் பெண்ணிடம் கேட்டவுடன், அவள் நிதானமாக, ‘‘**நீதான் அன்னையிடம் கேட்டால் உடனே கிடைக்கும் என்று கூறுவாயே, ஏன் டென்சன் ஆகிறாய்?**’’என்று கூறினாள்.

டாக்டரைக்கூட சந்திக்காது, உடனே அன்னையின் திருவுருவப் படத்திற்குமுன் அமர்ந்து ரூ.100/- காணிக்கை வைத்துவிட்டு, பிரச்சினைகளைக் கூறி அழ ஆரம்பித்தேன். பிறகு, சிறிது மனம் சமாதானம்அடைந்து திரும்பி சென்ற வழியே மீண்டும் வந்தபோது, ஒரு வீட்டில் இருந்து என்னை அழைத்து, என்ன தேடுகிறீர்கள்என்று கேட்டு, பின்னர் எடுத்துவைத்திருந்த கைப்பையைக் கொடுத்தனர். நிம்மதிப்பெருமூச்சுவிட்டேன். அதில் ரூ.1500/-உடன், railway pass, ID card, credit card, பீரோ சாவிபோன்ற எல்லாப் பொருட்களும் இருந்தன. ஸ்ரீ அன்னைக்கு நன்றி தெரிவித்துவிட்டு டாக்டரிடம் சென்றால், அவர் rabis ஊசி போடவேண்டும்என்று கூறினார். வீட்டிற்கு அருகில் எப்போதும் வாங்கும் மெடிக்கல் ஷாப்பிற்கு வந்தேன். அங்குள்ள pharmacist, ‘‘அவசரப்படாதீர்கள். ஒரு சிறுகுழந்தைக்கு இந்த ஊசிபோட்டு ரியாக்ஷன்ஆகி இரண்டு மாதங்களுக்குமுன் இறந்துபோய்விட்டது. அந்த நாய்க்கு rabis ஊசிபோட்டிருந்தால், குழந்தைக்குப் போடவேண்டாம். எந்த

veterinary doctorரிடம்நாயைக் காண்பிக்கிறார்களோ, அவரிடம் கேட்டுத் தெரிந்துகொண்டு மேற்கொண்டு செய்யுங்கள்''என்றார். நானும் சரிஎன்று, மாலை 5.30 மணிவரை காத்திருந்துவிட்டு veterinary doctorரிடம் போய் நாய் பெயரைச் சொன்னவுடன் அவர், “குருக்கள் வீட்டு நாய்க்கு மூன்று மாதங்களுக்குமுன்னால்தான் rabis injection போட்டிருக்கிறேன்” என்று கூறிவிட்டு, என் குழந்தையின் முகத்தையும் நன்றாகப் பார்த்து, “இது நாய் கடித்ததால் ஏற்படவில்லை. நகக்கீறல்கள்தாம். இரண்டு நாட்களில் சரியாகிவிடும். வெறும் tetenus toxin injection போட்டால் போதும்” என்று கூறினார். ஸ்ரீ அன்னைக்கு நன்றி கூறிவிட்டு வீட்டிற்கு வந்தேன். காலையில் மலைபோல் தோன்றிய பிரச்சினைகள் மாலையில் பனிபோல் விலகியது. இது ஸ்ரீ அன்னையின் கருணையே.

❀❀❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

மனிதனுடைய வளர்ச்சி கண்ணுக்குத் தெரியும். பரிணாமம் கண்ணுக்குத் தெரியாது. ஆழ்ந்த மனதில் ஆன்மா பரிணாம வளர்ச்சியடைவதாகக் கூறுகிறார் பகவான். வாழ்க்கை தனக்கு வேண்டிய ஆன்மீக வளர்ச்சியைப் பெற முனைந்ததில் பெற்ற பலன், மனோமயப்புருஷன். ஆனால், அது முடிவன்று. பகவான், தனி மனிதனிலுள்ள ஆன்மா வளரவேண்டும்என்கிறார். இதை எய்த ஆன்மாவே தன்னை உணரவேண்டும். தன் பரிணாமவளர்ச்சியை நாடவேண்டும். அதன் பலனாக, சைத்தியப்புருஷன் வெளிப்படுவான். ஈஸ்வரனும் அடுத்த கட்டத்தில் வெளிப்படுவான்.

*வளர்ச்சி தெரியும். பரிணாமம் தெரியாது.*





**Religious injunction solves the problem of the individual, not for the whole.**

**மதவழிபாடு தனிமனிதனுடைய பிரச்சினையைத் தீர்க்கும்; மனிதகுலத்திற்குப் பயன்படாது.**

- ✡ **ஸ்ரீ அரவிந்தம் நவதத்துவம்எனப்படும். 'நவ'என்றால் புதியது.**
- ✡ **என்ன புதியதுஎன்பதை பல கோணங்களில் கூறலாம்.**
  1. **ஜடமும், ஆன்மாவும் ஒன்றே.**
  2. **முரண்பாடு உடன்பாடு.**
  3. **ஜீவாத்மாவே பரமாத்மா.**
  4. **பகுதி முழுமையைவிடப் பெரியது.**
  5. **உலகில் தீமை படைக்கப்படவில்லை.**
  6. **இதுவரை ஆன்மீகம் தனிமனிதனுடையது. ஸ்ரீ அரவிந்தம் தனிமனிதனுடைய ஏகபோக பொக்கிஷத்தைச் சமூகம் (collectivity), மனிதகுலத்திற்குத் தருகிறது.**
- ✡ **ஸ்ரீ அரவிந்தம் மரபிலிருந்து 30 வகைகளாக மாறுபடுகிறது. அவற்றுள் முக்கியமான சில இங்குச் சொல்லப்பட்டது. இக்கட்டுரைக்குரியது தனிமனிதன்.**
- ✡ **ஸ்ரீமத் பகவத்கீதை வேத உபநிஷத சாரம். கீதை தான் கூறும் சரணாகதியை வேதம், உபநிஷதத்தைப் படித்துப் பயின்று பெறமுடியாதுஎனத் திட்டவட்டமாகக் கூறுகிறது. பகவான் "பகவத்கீதை கனிந்த ஆத்மாவுக்குரிய அழைப்பு; மனிதகுலத்திற்கு அது பயன்படாது"என்கிறார்.**
- ✡ **20ஆம் நூற்றாண்டுவரை, அதுவும் 1950வரை மனிதன் தன் வேலைகளைத் தானே செய்துகொண்டான். பிள்ளைக்குக் கல்வி அவன் பொறுப்பு, பெண்ணுக்குத் திருமணம் அவன் கடமை, நிலம் வாங்க, கடை வைக்க அவனே முதல் சேகரம் செய்யவேண்டும். சுருக்கமாக,**

**என்பது வாழ்க்கை வழிமுறை.**

- ✡ **1950க்குப்பின்,**
  - ❀ **பிள்ளைக்குக் கல்விப் பொறுப்பை சர்க்கார் கொஞ்சம் கொஞ்சமாக ஏற்றது.**
  - ❀ **1980க்குப்பின் பெண் திருமணப் பொறுப்பில் சர்க்கார் பங்கு கொண்டது.**
  - ❀ **தற்பொழுது நம் வீட்டில் மின்விளக்கெரிய சர்க்கார் செலவேற்கிறது.**
  - ❀ **நம் நிலத்தில் நீர் பாய்ச்ச சர்க்கார் மின்கட்டணம் கட்டுகிறது.**
  - ❀ **நமக்கு உடல் ஊனமானால், அதனால் எழும் பொறுப்புகளை ஓரளவு சர்க்காரும், சமூகமும் ஏற்கிறார்கள்.**
- ✡ **தனிமனிதன் மோட்சம் தேடியது மரபு. கீதை அதையே கூறுகிறது. அதை முதிர்ந்த ஆத்மாவுக்கு எளிதில் பூர்த்திசெய்யும் வழியைக் கூறுகிறது.**
- ✡ **ஸ்ரீ அரவிந்தம் மனிதகுலம் மோட்சம் பெறும் வழி திருவுருமாற்றம் எனக் கூறுகிறது.**
  - ❀ **அதனால் இனி மதவழிபாட்டிற்கு இடமில்லை.**
  - ❀ **மனிதன் ஜீவாத்மா மட்டுமன்று, பரமாத்மாவும்கூட.**
  - ❀ **பூரணயோகம் மனிதன் செய்யும் யோகமில்லை. மனிதனில் இறைவன் செய்யும் யோகம்.**
  - ❀ **மனிதன் பங்கு உபத்திரவம் தாராமலிருப்பது. அதற்குரிய மார்க்கம் சரணாகதி.**

❀❀❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

எல்லையில் செய்யும் சோதனைகளே சிறந்தவை. பழைய பழக்கம் தடையாக இல்லாவிட்டால் அது எல்லைக்கோடாகும்.

***எல்லாச் சோதனைகளும் எல்லைக்குரியன.***





# அன்னையின் ஸ்பர்ஸம்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

இல.சுந்தரி

அவர் வெளியே புறப்படுகிறார்என்று பேச்சு. கார் வெளியே வந்து நின்றுவிட்டது. இருபுறமும் அன்பர்கள் கூட்டம் அவரைத் தரிசிக்க ஆவலுடன் காத்திருக்கிறது. கூட்டத்தினிடையே அவளும் இருந்தாள். அத்தனைக் கூட்டத்தில் அவளைப் பிடித்திழுத்து கன்னத்தைத் திருகிவிட்டுப் போகிறார். பரிசா? தண்டனையா? ஒருவருக்கும் விளங்கவில்லை.

அவள் இங்கு வருவதற்குமுன் இரவில் அன்னைக்குத் தனிக்கவனிப்புடன் தயாரிக்கப்பட்ட பால்சோற்றை ஒரு வெள்ளிக் கிண்ணியில் ஓரன்பர் கொண்டுவர அனுமதியிருந்தது. திடீரென ஒரு நாள் அன்னை, அந்த அன்பரை அழைத்து, "விமல், பூமாவிடம் பால் சோற்றை அனுப்பு"என்று கூறிவிட்டார். விமலுக்கு ஒரே ஏமாற்றம். எங்கிருந்தோ வந்து என் அற்புத வாய்ப்பை இந்தப் பைத்தியம் பிடித்துக் கொண்டதுஎன்று புலம்பலானார்.

அவள் சிறுமி. கபடமும், கவலையுமற்ற சிறுமி. அவளுக்கு எதுவும் தெரியாது. அவருடைய வாய்ப்பை அவள் தட்டிப்பறிக்கவில்லை. அன்னையே அவளை அழைத்து அவ்வாய்ப்பைத் தருகிறார்.

பூமா பைத்தியமென்றும், அவளைக் குணப்படுத்த அன்னை முயல்கிறார்என்பதும் எல்லார் கணிப்பும். ஆனால், அவள் அந்தரங்கம் அன்னையே அறிவார்.

ஓரழகிய வெள்ளித்தட்டில் வெள்ளிக்கிண்ணத்தில் மணக்கும் பால்சோற்றை மூடி எடுத்துவருகிறாள் சிறுமி.

முன்பு அவள் தன் சின்னஞ்சிறு அம்பாள் விக்ரகத்திற்குச் சோறூட்ட முயன்றதுண்டு. இன்று அவளை அழைத்து, அவள் கையால், அப்பா சொன்ன பேசும் தெய்வம் சோறுண்ணப்போகிறது. மிகவும் சந்தோஷமாய் உணர்ந்தாள்.

மெல்ல அவர் முன்னிருந்த டேபிளில் தட்டை வைத்தாள். "என்ன இது? யாருக்குக் கொண்டுவந்தாய்?"என்கிறார்.

"பால்சோறு. உங்களுக்குத்தான்"என்றாள். "நீ சாப்பிட்டாயா?" பரிவை வெளிக்காட்டாமல், அவள் முகத்தை நேரே பாராமல், ஜாடையாய் கவனித்தவண்ணம் கேட்டார்.

"இல்லை. ஒன்பது மணிக்குத்தான் சாப்பிடுவேன்"என்றாள்.

"இங்கு என்னுடன் சாப்பிடுகிறாயா?"என்கிறார் அன்னை. "இல்லை இல்லை. இது உங்களுக்கு"என்று அவசரமாய் மறுத்தாள்.

"வா இப்படி"என்று அருகில் அழைத்து, கட்டாயப்படுத்தி, ஓரிரு ஸ்பூன் உணவினை அவளைச் சாப்பிடச்செய்தார். சந்தோஷம், சங்கடம், இரண்டுமாய்க் குழந்தை தவித்தாள். சிறிதளவு தானும் உண்டபிறகு மீதியைக் கொடுத்தனுப்பிவிட்டார்.

வெளியே விமல் அந்தப் பிரசாதத்திற்குக் காத்திருந்தார். அன்னை முழுவதும் சாப்பிடவில்லையேஎன்று அவள் நினைத்தாள். உண்மையில் அன்பர்கள் விரும்பும் பிரசாதத்திற்காகமட்டுமே அன்னை சிறிது உண்கிறார்என்பது அவளறியாதது. காத்துக்கொண்டிருந்த விமல், பால்சோற்றுக்கிண்ணத்தைப் பெற்றுக்கொண்டு, "அன்னை என்ன சொன்னார்?"என்கிறார்.

ஒன்றுமில்லைஎன்பதுபோல் தலையசைக்கிறாள். இவள் ஒவ்வொரு முறை அன்னையிடம் சென்றுவரும்போதும் "அன்னை என்ன சொன்னார்?"என்று கேட்கத் தவறமாட்டார்கள். ஒன்றுமில்லைஎன்பது போல் தலையசைப்பாள்.

ஆமாம், அவளை அன்னை அடிக்கிறார், திட்டுகிறார். அவள் எப்படிச் சொல்வாள்என்று பேசிக்கொள்வார்கள்.



அவளோ உங்களுக்கெல்லாம் என்ன தெரியும்என்பதுபோல் தனக்குத் தானே சிரித்துக்கொள்வாள்.

திடீரென அவளை அழைத்து, "அம்மா வந்தார்களாமே. நீ போகவில்லையா?"என்று ஒன்றுமறியாதவர்போல் கேட்கிறார் அன்னை.

"அம்மாவிடம்தானே இருக்கிறேன்"என்று மெல்ல முணுமுணுத்தாள்.

"நீ கவனமாக நடந்துகொள்ளவில்லையென்றால், உன்னை அனுப்பிவிடுவேன்"என்றார்.

அவள் என்ன செய்வாள்? அருளமுதம் ஆயிரம் முறைகள் படித்தும் நமக்கு வாராத இடையறாத அன்னைநினைவு அவளுக்கிருக்கிறது. இடையறாத தரிசனமும் கிடைத்துவிடுகிறது.

அவள் எந்த வேலையில் ஈடுபட்டாலும் தனக்குள் ஏதோவொன்றில் ஆழ்ந்துவிடுகிறாள். உடனே அன்னை அழைத்துவிடுகிறார். வரும்போது முகம்கொள்ளாத மலர்ச்சியுடன் வருகிறாள். அற்புதமாக வேலை முடிகிறது. அவளைப் பார்க்கும்போதெல்லாம் அன்னை அவளிடம் கடுமையாகயிருப்பதுபோலத்தான் தெரிகிறது. ஆனால், அவளோ முகம் சுளிக்கவோ, அழவோயில்லை. மகிழ்ச்சியால் பூரிக்கிறாள். இது எப்படி? எல்லோர்க்கும் விந்தையான இந்தப் புதிர் ஒரு நாள் அவிழ்ந்தது.

அன்று ஜன்னல், கதவுகள் துடைக்கும் பெரியவர்க்கு உதவியாக அவள் அனுப்பப்பட்டிருந்தாள். சிறிது துடைக்கும் வேலை தொடங்கியதுமே மெய்ம்மறந்து நின்றுவிட்டாள். பெரியவர் அவளைக் கவனித்தார். என்ன இது? கதவில் வைத்த கை அப்படியேயிருக்கிறது. ஆடாது, அசையாது நிற்கிறாள். எதையோ கவனிப்பதுபோல் தெரிகிறது. ஆனால், அவள் பார்வை படுமிடத்தில் அவள் கவனம் இல்லையெனத் தெரிகிறது. அதே நேரம் அன்னை அவளைக் கூப்பிட்டனுப்புகிறார்.

"என்ன செய்துகொண்டிருந்தாய்?"என்றார் அதட்டலாக.

அவளோ சிரிப்புமாறாத முகத்துடன், "கதவு துடைத்துக்கொண்டு இருந்தேன்"என்றாள்.

"கதவை எங்கே துடைத்தாய்? பிடித்துக்கொண்டு நின்றாய்"என்றார்.

நேரே பார்த்ததுபோல் ஒவ்வொன்றையும் சொல்கிறார்என்று எண்ணியபடி குனிந்துகொண்டாள்.

“உன்மீது ஒரே புகார். நீ எந்த வேலை கொடுத்தாலும் சரியாகச் செய்வதில்லையாம். எல்லோரும் சொல்வது சரிதானா?”என்று கோபமாய் குரலை மாற்றிக் கேட்டார்.

அவள் சிறிதும் பதறாமல் ‘ஆம்’என்பதுபோல் தலையசைத்தாள். “இனி, எல்லார்முன்பும் வைத்து உனக்குத் தண்டனை தருவதுதான் சரி”என்றார்.

முகம்கொள்ளாத பெருமித மகிழ்வுடன் நிற்கிறாள்.

“போ போ. இன்று உனக்கு விசாரணை வைத்திருக்கிறேன். மிகவும் என்னைத் தொல்லைசெய்கிறாய்”என்றார்.

அடக்கமுடியாத மகிழ்வுடன் ஓடுகிறாள். அருகில் நிற்கும் சாதகர், இன்று என்ன நடக்கப்போகிறதோ, அன்னை தவறுகளைக் கண்டால் ‘மகாகாளி’ வடிவம் எடுத்துவிடுவார்என்று எண்ணியவண்ணம் நிற்கிறார்.

கடைக்கண்ணால் அவரைக் கண்காணித்த அன்னை அவரிடம், “இன்று மாலை எல்லோரும் முன்னிடத்தில் கூடிவிடுங்கள். அவளையும் அழைத்துவாருங்கள். அவள் ஏன் இங்கு வந்தாள்என்று விசாரித்து விடுவோம். தீர்ப்பு நீங்களெல்லோரும்தான் சொல்லப்போகிறீர்கள்” என்றார் அன்னை.

ஆஸ்ரமம் முழுவதும் அன்னை கூறிய செய்தி இறக்கைகட்டிப் பறந்தது. விசாரிக்கப்போகிறாராமே. தீர்ப்பு நாம் சொல்லவேண்டுமாமே. என்ன தீர்ப்பு சொல்லுவோம், இதே பேச்சு.

மாலை 6 மணிக்கு எல்லோரும் ஆர்வமாய் மிக்கஎதிர்பார்ப்புடன் கூடிவிட்டனர். அன்னையும் வந்து ஆசனத்தில் கம்பீரமாய் அமர்ந்து விட்டார்.

“எல்லோரும் வந்தாயிற்றா?”என்றார். “ஆம், அன்னையே. நாங்கள் எல்லோரும் வந்துவிட்டோம்”என்று ஒருவர் கூறினார். “அவளெங்கே?” என்றார் அன்னை. அப்போதுதான் எல்லோரும் தங்களுக்கிருந்த பதற்றத்தில் அவளைக் கவனிக்கவில்லைஎன அறிந்தனர்.



அவளோ ஓரிடத்தில் அமர்ந்து பூத்தட்டு ஒன்றில் பல வண்ண மலர்களை அழகுற அடுக்கும்போதே அந்த முகம், அந்தச் சிரிப்பு, அந்தக் கண்கள் தோன்றவே மெய்ம்மறந்துபோனாள். 6 மணிக்கு அன்னை வரச்சொன்னதும் மறந்தாள்.

எல்லோர்க்கும் ஒரே பதற்றம். எந்த வேலையையும் பாதி செய்யும்போதே கனவு காண்பவளைப்போலாகிவிடுகிறாள். அன்னை அழைத்து அழைத்துக் கண்டிக்கிறார். இப்போது அன்னையின் கட்டளையையே மறக்கும்படி அவளுக்கு என்னாயிற்று? இன்றோடு அவள் ஆஸ்ரம வாழ்க்கை முடியப்போகிறது. அவளை அன்னை வெளியேற்றி விடப்போகிறார்என்று அனைவரும் எதிர்பார்க்கின்றனர்.

“அவள் எங்கிருந்தாலும் பார்த்து, அழைத்துவாருங்கள்”என்று கோபமாய் ஆணையிடுகிறார் அன்னை. சாதகர் ஒருவர் ஓடிச்சென்று அவளைத் தேட, அவள் நிதானமாய் ஒரு பூத்தட்டில் அடுக்கிய மலர்களை பார்த்து, தன் வயமிழந்து உட்கார்ந்திருக்கிறாள். “பூமா, இங்கே என்ன செய்துகொண்டிருக்கிறாய்? அன்னை உன்னை அழைத்துவரச் சொன்னார். கோபமாயிருக்கிறார்!”என்று பதறினார். கவனம் கலைந்து எழுந்து உடன்வந்தாள்.

அன்னை மகாராணியாய் வீற்றிருக்க, எல்லோரும் ஏன் கூடி உள்ளனர்என்று எண்ணியவண்ணம் வருகிறாள். தன்னைப்பற்றிய விசாரணைக்குழுஎன்ற எண்ணமே தோன்றவில்லை.

“ஏன் இவ்வளவு நேரம் உனக்கு?”என்று அன்னை கோபமாய்க் கேட்டார். எல்லோரும் எதிர்பார்த்ததுபோல் அவளிடம் எவ்விதத் தடுமாற்றமுமில்லை. இனிமையாய்ச் சிரிக்கிறாள்.

“கூப்பிடக் கூப்பிடக் கவனமின்றி ஒரு மலர்த்தட்டை பார்த்தவண்ணம் இருந்தாள். அவள் கவனத்தைத் திருப்பி, அவளை அழைத்துவர நேரமாகிவிட்டது”என்றார் அழைத்துவரச் சென்றவர்.

“அவர் சொல்வது உண்மைதானா?”என்றார் அவளைப் பார்த்து.

‘ஆம்’என்பதுபோல் தலையசைக்கிறாள். “அப்படி என்ன பார்த்தாய் அதில்?”என்றார் கடுமையாக.

மகிழ்ச்சிபொங்கும் சிரிப்பு இதழில் ஊற, கள்ளங்கபடமின்றி நிற்கிறாள்.

“கேட்ட கேள்விக்குப் பதில் சொல். இல்லையென்றால், அடித்து விடுவேன்”என்று பாவனையாகக் கையை ஓங்கினார்.

எல்லோரும் பதறிப்போக அவள்மட்டும் ஆனந்தபரவசமாய் நின்றிருந்தாள். ஏதோ இனியகாட்சி கண்டிருக்கிறாள்போலும்.

“நீ என்ன செய்கிறாய்என்பதை எல்லோருக்கும் சொல்”என்றார்.

பதில் சொல்லாது மலர்ந்த நாணத்துடன் நின்றிருந்தாள்.

“உண்மையைச் சொல்லிவிடு”என்றார் கண்டிப்பாய்.

தயங்கியபடி, “எல்லோர் முன்னிலையிலுமா?”என்றாள்.

‘‘ஆம், எல்லோர் முன்னிலையிலும்தான் சொல்லவேண்டும். உண்மையைச் சொல்”என்றார்.

‘‘**நான் எப்போதும் உங்கள் நினைவாகவே இருக்கிறேன். அதனால்தான் என்னையே மறந்துவிடுகிறேன்**”என்றாள் மென்மையாக.

“நான் அடிக்கிறேன்என்ற அச்சமா?”என்றார்.

“அச்சமில்லை. அடிவாங்கும் ஆனந்தம் எனக்கு மிகவும் பிடிக்கிறது” என்றாள்.

“அன்னையே! இவள் என்ன சொல்கிறாள்? ஒன்றும் புரியவில்லை” என்றார் ஒருவர்.

**“அவள் நிபந்தனையின்றி, எதிர்பார்ப்பின்றி, வேறு தேவையின்றி என்னைமட்டும் நினைக்கிறாள். என்னில் தன்னையே மறக்கிறாள்’’ என்றார் அன்னை**.

“அடியை ஆனந்தம்என்கிறாளே”என்றார் ஒருவர் நம்பமுடியாமல்.

‘‘ஆம், **நீங்கள் அதை அடியென்றும், திட்டுஎன்றும் புரிந்து கொண்டிருக்கிறீர்கள். அவள் என் ஸ்பர்ஸத்தை உணர்கிறாள். ஆனந்தப் படுகிறாள்’’என்றார் அன்னை.**

“ஆனால், அன்னையே! முதல் நாள் உங்களைப் பற்றிக்கொண்டு அழுதாளே?”என்றார் ஒருவர்.



**“அது அவள் அழுகையில்லை. அவள் என்னைச் சரணடைந்தாள். அவள் என்னைச் சரணடைந்ததால், அவள் ஆணவம் தான் எங்கே போவதுஎன்று அழுதது**”என்றார்.

“அப்படியென்றால், அதன்பிறகு என்னவாயிற்று?”என்றார் ஒருவர்.

**“அப்பொழுது நானவளை என் இடக்கையில் பற்றி இழுத்துவந்தேன். நான் கடுமையானவள்என்று நீங்களெல்லாம் விமர்சிக்கவில்லையா?**” என்றார்.

எல்லோரும் தம் செய்கைக்கு நாணுவதுபோலாயினர்.

**“அப்போது அவளை நான், அவளைப் பற்றிஇருந்த ஆணவத்தின் (அகந்தையின்) பிடியிலிருந்து விடுவித்து இழுத்துவந்தேன்**”.

‘‘புரியவில்லை அன்னையே. எல்லோருமிங்கு உம்மிடம் அன்பு கொண்டுதானே வந்திருக்கிறோம்’’என்று தயங்கியவாறு ஒருவர் கேட்டார்.

“ஆம், அது உண்மைதான். **எத்தனை பேர் என்னை நம்பி பூரணமாய்ச் சரணடைந்திருக்கிறீர்கள்? உங்கள் ஒவ்வொருவர்க்கும் என்னிடம் ஒரு எதிர்பார்ப்பு, ஒரு தேவையிருக்கிறது. உங்களை நான் நேசிக்கவேண்டும் என்று எதிர்பார்க்கிறீர்கள். உங்கள் நன்மை கருதி நான் கண்டிப்பாயிருந்தால், நீங்கள் என்னைக் கடுமையானவளாய்ப் புரிந்து, வருந்துகிறீர்கள். அவரவர்க்குரியதைச் செய்யும்போது பாரபட்சமாய் உணர்கிறீர்கள். ஆனால், அவள்? அவளுக்குப் பதிலுக்கு என் அன்புகூடத் தேவையில்லை. அவளுக்கு என் பேச்சு, செயல், கடுமை, யாவுமே என் இனிய ஸ்பர்ஸமாய்த் தெரிகிறது. ஒருபோதும் அவள் என்மீது வருத்தப்பட்டதில்லை**. நீங்களே தீர்ப்புச் சொல்லுங்கள். அவளை அனுப்பிவிடுவோமா”என்றார்.

எல்லோரும் நாணத்தால் தலைகுனிந்தனர்.

“அன்னை பூமாவை ஏன் இப்படிப் புகழ்கிறார்? பொறாமையாய் இருக்கிறதுஎன்ற எண்ணம் எழுகிறதா? அன்னையின் குழந்தைகளுக்கு அது உகந்த மனோபாவமன்று. வேறு என்ன செய்யஎன்று கேட்கிறீர்களா?”

அதற்கு பகவானின் பதில் இதோ:

**அன்பு பொறாமையின் புதல்வி அல்லது கைப்பாவைதானா? சந்திரபாலியைக் கண்ணன் நேசிக்கிறான்என்றால், நானும் ஏன் அவளை நேசிக்கக்கூடாது,**

என்றார் அன்னை.

“பூமாவை நாங்களும் நேசிக்கிறோம். அவளை அனுப்பவேண்டாம். எங்கள் அகக்கண்கள் திறக்க உதவிய அவள் பக்திக்கு நன்றி”என்றனர் அனைவரும்.

அன்னை அவளைக் கட்டியணைத்து முத்தமிடுகிறார்.

*முற்றும்.*

❀❀❀

**மனிதனுக்கு மனம் ஏற்பட்டு அறிவு செயல்பட ஆரம்பிக்கும்வரை வாழ்வு நேராக இருந்தது. பொய்யும், குதர்க்கமும், வக்கிரபாவங்களும் ஏற்பட்டது மனம் செயல்பட ஆரம்பித்தபிறகுதான். அன்னை தம் சூட்சுமப்பார்வையில் மனத்தின்மீது திரையாக ஒரு படலம் பரவியிருப்பதைக்கண்டு, அதுவே வக்கிரபாவங்களின் உறைவிடம் என்கிறார். வெங்காயத்தின் தோல்போல மெல்லியதாய்த் தெரிகிறது. அது கிழித்தெறியப்பட்டால், மனிதனும், இறைவனும் நேருக்குநேர் எந்த நேரமும் சந்திக்கலாம்என்கிறார். நம் மனப்பான்மைகள், மனம் ஏற்றுக்கொண்ட பழக்கங்கள், நம்பிக்கைகள், இவற்றை விட்டுவிட்டால் இத்திரை விலகும்.**

**உலகம் அறியாத உயர்ந்த இன்பம் அன்னையின் ஸ்பர்ஸம்.**

**கர்மயோகி**

## ஸ்ரீ அரவிந்த சுடர்

**பக்குவத்தால் அருளைப் பெறும் திறன் பழைய பழக்கங்களை விட்டு, புதிய பழக்கங்களை ஏற்க முடிவதாலும், பெரு நோக்கங்களை ஏற்பதாலும், உயர்ந்த கருத்தை ஏற்பதாலும், தியானத்திலுயர்வதாலும், பற்றை விடுதல், சமத்துவம், ஆகியவற்றை மேற்கொள்வதாலும் வரும்.**





## P.58 Their station of inviolable might.

**எதிர்க்கமுடியாத வலிமை அவர்கள் நிலைமை.**

- ✡ **உலகின் பரந்த கடமையைத் தாங்கிப்பிடிக்கும் ஸ்தாணு.**
- ✡ **அஞ்ஞானத்தைப் பிரகாசமாக்கும் ஞானம்.**
- ✡ **அவர் ஏக்கம் உதாசீனத்தால் பெறும் உதவி.**
- ✡ **அஸ்திவாரத்தை மேலே வர அழைக்கும் சிகரம்.**
- ✡ **சிறியதைப் பெரியதாக்க வரும் பரந்த அழைப்பு.**
- ✡ **விலகி நிற்பார் தரும் வீரச்செயல்.**
- ✡ **அமைதியை விழையும் வேகத்தின் எழுச்சி.**
- ✡ **சிறிய மனத்தின் குறுகிய ஆராய்ச்சி பரம்பொருளின் சக்தியைச் சந்திக்கும்.**
- ✡ **மரணமும், கண்ணீரும் செய்யும் கடுமையான சேவை.**
- ✡ **நகரத்தை ஏற்படுத்திய மேதையை ஏற்கும் மனநிலை.**
- ✡ **காலடி எடுத்துவைக்கும் காலனை ஏற்கும் பாங்கு.**
- ✡ **உலகின் நெஞ்சில் கொட்டும் தேளைப் புறக்கணிக்கும் மனம்.**
- ✡ **உடலையும், உயிரையும் பிளக்கும் வேதனையைப் பொருட்படுத்தாத பொருள்.**
- ✡ **உணர்வின் உயர்வுதாழ்வைக்கடந்த அற்புதத்தின் அன்ன நடை.**
- ✡ **அழியும் நன்மையில் பங்கற்ற அவர்கள்.**
- ✡ **ஊமையான தூய்மை தீமையில் பங்கேற்பதில்லை.**
- ✡ **காப்பாற்றும் வலிமையை இழக்க மறுக்கும் மக்கள்.**
- ✡ **இறைவனின் முரண்பாடுகளின் சத்தியத்தை உணர்ந்தவர்.**
- ✡ **அனைத்தையும் காணும் அற்புதப்பார்வை.**

- நீண்ட, நெடிய யாத்திரையின் மெதுவான வேகம்.
- பயங்கரத்தில் எழுந்த எதிர்பாராத எழுச்சி.
- அழியாத அமரத்தின் பார்வை ஊனக்கண் பார்வையில்லை.
- மறைந்த அம்சங்களையும், திரைமறைவில் உள்ள சக்திகளையும் காணும் பார்வையது.
- இயற்கையின் போக்கையும், சட்டத்தையும் அறிவது.
- நீர்க்குமிழி வாழ்வால் பாதிக்கப்படாத பாதை.
- பயமும், பரிதாபமும் அலைக்கழிக்க முடியாத வாழ்வு.
- சிருஷ்டியின் சிக்கலை உடைக்க முன்வாராதவர்.
- உலகத்து வேதனையை அழிக்கமுயலாத அறிவு.
- காலத்துள் காலத்தைக்கடந்ததை எதிர்நோக்கும் பொறுமை.
- ஆத்மீக இரகஸ்யம் ஆபத்திற்கு உதவும்.
- பரிணாமத்தின் பாதை மெதுவாக எழும்.
- பிடிவாதமாக இயற்கை இடும் பாதை.
- தெய்வகடாட்சம் அரியாசனம் வீற்றுள்ளது.

❀❀❀

### ஸ்ரீ அரவிந்த சுடர்

இரசித்து அனுபவிப்பது சத்தியவாழ்வுக்கும், சிருஷ்டிக்கும் அடிப்படை. விரதம் இரசனையை உயர்த்தும். எதையும் அதிகப்படுத்துவது சரியன்று. அதிகமாக அனுபவிப்பது அழிச்சாட்டியம். விரதம் அளவுகடந்து உயர்ந்தால், உணர்வு மறத்துப்போகும்.

***தெய்வீக வாழ்வுக்குரியது ஆனந்த அனுபவம்.***



# Spiritual Light

Spiritual light seen on the face is called *tejas*; seen in the sky is vision, as Sundaramoorthy Nayanar saw Parvati and Paramasivam. Light is one of the twelve expressions of the Spirit and it reveals in various ways and in various degrees. The primitive man who discovered that a stone can be used as a tool received the Spiritual light as an illumination in his physical mind that was activated by the overflowing energy of the body while it was in motion. The fear-ridden superstitious villager sees the same 'spiritual light' as will-o-the-wisp. Edison never went to school, but he patented over a thousand inventions. **He exerted his body to the utmost. His exertions released enormous energy. That energy was organised into skill. That skill needed an idea.** He is considered a genius, maybe a technological genius. His body thought and received spiritual light.

*Tapas*, spirituality, is to stop thinking and BE the Spirit. Between the body thinking and *tapas*, there are twelve or thirteen levels. India has amply accomplished at the 13th level in thousands of Rishis. Sri Aurobindo has taken Indian yoga a further step, a step where the Spirit will express in life. For that, one has to travel another six steps. *Tapas* is ascent. Expressing the Spirit in life is descent. **Such a life is called divine life**. It is God's work, not man's effort. Man's part is only surrender. Thousands of devotees do it when they pray. During prayer, they surrender themselves to Mother. Mother accomplishes for them what they cannot accomplish.

**Stock accumulates for years. It is called 'dead stock'. It is sold off for a song**. Suppose you have stocks worth a crore

accumulated over ten or fifteen years, there is no solution other than throwing it all away for a throwaway price. For the devotee, the rule is different. He calls Mother to sell off his stocks. Before doing so, he must reverse every refractory behaviour that made the stocks accumulate. Neglect, arrogance, dishonesty, indifference, etc., are some of them. Should he remove his own contributions to the accumulated stocks and call MOTHER, the stocks will melt away in a short time. Once, in a long detailed article, I have explained how a young boy liquidated such stocks in seven days.

— *Courtesy:* **New Indian Express**

❀❀❀

### ஸ்ரீ அரவிந்த சுடர்

அதிர்ஷ்டம் வரும்பொழுது சூழலை உயர்த்தி நல்லசகுனம் தெரிகிறது. அடுத்தாற்போல் ஒரு வாய்ப்பைக் கொணரும் அல்லது இழந்த சந்தர்ப்பத்திற்கு உயிரளிக்கும். சரியான முறைப்படுத்தப்பட்ட சந்தர்ப்பத்தின்மூலம் அது செயல்படும். அல்லது அதுபோன்ற சந்தர்ப்பமில்லாவிட்டால் அதைச் சரிகட்ட முனையும். பலனைத் தரும். அடுத்தபடியாக மனிதன் வக்கிரமாக இருந்தால் அவனுக்கு அனுபவமில்லாத துறை அல்லது தெரியாத வழிமூலம் பெறக் கட்டாயப்படுத்தும்.

***சகுனமாகவும், வாய்ப்பாகவும், சந்தர்ப்பமாகவும் வரும் அதிர்ஷ்டம்.***

Printed by Mrs. Anuradha Sriram, Integra, No.51, II Cross, Jawahar Nagar, Nellithope Post, Pondicherry-5 and Published by Mr. P.V. Balakrishnan, 12, First Cross, Venkata Nagar, Pondicherry-11 on behalf of The Mother's Service Society, Pondicherry-11.
Editor: Karmayogi

# சொல் எழுப்பிய எதிரொலி

திருட்டுப் பழக்கமேயில்லாத சிறுவனுக்குத் திருடத் தோன்றியது. நண்பனும், இவனும் இரண்டு பென்சில்களை எடுத்தனர். நண்பனுக்கு ஒன்று கொடுத்தான். செய்த காரியத்திற்கு வெட்கப்பட்டான். மறந்துவிட்டான்.

வீட்டில் மாமாவுக்கு வதந்தி நிரம்பிய வாய். யாரைப் பற்றியாவது ஏதாவது புனைந்து சொல்ல வாய் ஊறும். பையனைக் கிளப்ப முயன்றார். மாமா ஏதோ பேசப்போகிறார்எனப் புரிந்துகொண்டான். அவர் வாயை அடக்கவேண்டும்என நினைத்தான். அவரைப்போலவே முனைந்து பேச முயன்றான். அப்படிப் பேசும் பையனில்லை. இல்லாத அசிங்கம் தோன்றியது. தானும் மாமாவை மிஞ்ச முடியும்என நினைத்தான். மாமாவின் குறும்புப்பார்வை அவனை மேலும் கிளறியது.

> ''ஏன் மாமா, எதிர்வீட்டில் காமிரா திருடினேன்என சொல்லத் துடிக்கிறீர்கள். உங்களுக்கு, திட்டவேண்டும்என்றால் திட்டுங்களேன். ஏன் அடுத்தவர் கூறியதாகக் கற்பனையைப் புனைந்து பேசவேண்டும்''

என்றான். மாமாவை மடக்கியதில் பரமதிருப்தி. சொல்லியவன் வாய் மூடவில்லை. மாமா, நண்பனிடம் கொடுத்த பென்சிலைக் கொடுத்து, ''உன் நண்பன் இது வேண்டாம்எனத் திருப்பிக்கொடுத்துவிட்டான். எனக்குத் தெரியுமே. நீ நல்லபையனாயிற்றே''என விஷமமாகச் சிரித்தார். தன் குட்டு வெளிப்பட்டுவிட்டது தெரிந்து அவமானப் பட்டான். தவறான சொல்லை விளையாட்டாகச் சொல்லி விஷமமாகச் சிரிக்க முயன்றபொழுது, எப்பொழுதோ போன சிறியதிருட்டு வெளிவருவது **Life Response**.

**சொல் சக்தியுடையது.**

❀❀❀

# சக்தியுள்ளது சொல்

25,000 ரூபாய்க்கு விற்கமுடியாத நிலத்தை அபிவிருத்தி செய்வதற்காக வாங்க முன்வந்தவர் அதன்மீதுள்ள கடன்களை விலக்க முயன்று 55,000 ரூபாய்க்கு வாங்கினார். புன்செய்நிலம் அன்னை அருளால் நீர் கிடைத்து நன்செய்யாயிற்று. மதிப்பு 30 மடங்கு பெருகியது. ஒரு பாங்க் 1½ இலட்சம் கடன் சாங்ஷன் செய்து முதல்தவணையாக 25,000 ரூபாய் கொடுத்திருந்தது. பக்கத்துவீட்டுக்காரர் பாங்க் ஏஜெண்ட். அவர் அன்பரை அழைத்து 15,000 ரூபாய் கடன் பெறும்படிக் கூறினார். நான் வேறொரு பாங்க்கில் கடன் பெற்றிருக்கிறேன்என்பதை மறுத்து, நான் தர விரும்பும்பொழுது உங்களுக்கென்ன ஆட்சேபணை என்றார். அது முறையில்லைஎன்பதால், அன்பர் அவ்வுதவியைப் பெறவில்லை. அடுத்த மாதம் அதே ஏஜெண்ட் கூப்பிட்டு அனுப்பினார். எங்கள் Development Officer வந்திருக்கிறார், அவரைச் சந்தித்து நிலம் வாங்கிய விவரம், நீர் கிடைத்தது, அடுத்த பாங்க் 1½ இலட்சம் சாங்ஷன் செய்தது, 25,000 ரூபாய் கொடுத்தது, எதிர்காலத் திட்டம், ஆகியவற்றை எழுதி வைத்திருந்ததைக் காண்பித்தார்.

> **Chief Officer இவற்றையெல்லாம் எழுதியது யார் என்றார். எப்படி எழுதினீர்கள் என்றார். உங்களுக்கு டிராக்டர், கோடவுன், ரோடு வேண்டும். அதெல்லாம் சேர்ந்து 4¼ இலட்சம் தேவைப்படும். நாங்கள் அதைத் தருகிறோம். அடுத்த பாங்கிலிருந்து எங்கள் பாங்க்கிற்கு வரவேண்டும்என்றார். கேட்பதை நம்பமுடியவில்லை. நடந்தது உண்மை.**

முறையற்ற உதவியைப் பெற மறுத்துக்கூறத் தோன்றிய சொல் இல்லாத உரிமையை ஏற்படுத்தி, தேடிவந்து வலிய வற்புறுத்தித் தர முயல்வது அருளின் சூழலில் சரியான சொல்லுக்குரிய சக்தி.

❀❀❀